# ஈஸ்வர சந்திர வித்தியா சாகரர்

ஆக்கியோர் :

P. S. இராஜன்

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,

ஜார்ஜ் டவுன், சென்னை.

1937

பதிப்புரிமை]

[விலை அணு 6

# முகவுரை

பண்டித ஈஸ்வர சந்திர வித்தியா சாகரர் உலகு புகழ் உத்தமர்; சீர்திருத்தச் செம்மல்; கல்விக்கடல்; கருணைக்குன்று; எளிய நிலையிலிருந்து, ஊக்கத்தாலும் இடையறு உழைப்பாலும் உயர்வுபெற்ற தாய்நாட்டின் தவப் புதல்வர்; அல்லும் பகலும் அரும்பாடுபட்டு அறிவுக் குன்றின் சிகரம் அடைந்த அண்ணல்; 'சகல மக்களும் சமமே' என்று, மக்களிடை உயர்வு-தாழ்வு அகற்றிய சமரஸ ஞானி; பெண் கல்வி பரப்பிய பேரறிஞர்; விதவைகள் மறு மணத்தைச் சட்டமாக்கிய வீரர்; வையகம் இன்பமுடன் வாழப் பணி ஆற்றிய அருந்தொண்டர். இத்தகு அருந்தலைவராம் பண்டித ஈஸ்வர சந்திர வித்தியா சாகரரின் சரிதம் படித்தற்கும் படித்தபின் அவ்வழி நிற்றற்கும் இயைந்ததாக இருப்பது. இந்நூல் அச் சரிதத்தை அழகுறக் கூறுவது. இதனைத் தமிழ் மாணவர் உலகம் நன்கு மதிக்குமென்னும் துணிபுடையேன்.

அன்பன்,

P. S. இராஜன்

# பொருளடக்கம்


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| 1. | இளமைப் பருவம் .... .... | 1 |
| 2. | இளமையிற் சீர்திருத்த நோக்கம் .... | 14 |
| 3. | தியாக புருஷர் .... .... | 20 |
| 4. | சுயமதிப்பு வீரர் .... .... | 28 |
| 5. | பெண் கல்வி .... .... | 38 |
| 6. | விதவை மறுமணச் சட்டம் .... | 45 |
| 7. | கல்வி இலாகா அதிகாரி .... | 54 |
| 8. | தந்நலமற்ற பெரியார் .... .... | 63 |
| 9. | என் கடன் பணி செய்வதே .... | 72 |
| 10. | இறுதிக்காலம் .... .... | 80 |
| 11. | குணாதிசயங்கள் .... .... | 88 |

# ஈஸ்வர சந்திர வித்தியா சாகரர்

## 1. இளமைப் பருவம்

இவ்வுலகிற் பிறந்த மக்களுட் பலர் தம் நன்மையையும் சுகத்தையுமே பெரிதெனக் கருதி வாழ்கின்றனர்; எப்போதும் பொருள் திரட்டிப் பேழைகளில் மூடி வைப்பதையே விரும்புகின்றனர்; அவற்றிற்கெனவே தம் முயற்சிகளையும் அறிவையும் பயன்படுத்துகின்றனர். அவர்தம் செல்வம் எவ்வளவுதான் உயர்ந்து குவிந்தாலும் அவர்தம் பெயரும் செல்வத்தால் ஏற்படும் சிறு புகழும் அவருடனே மடிந்துவிடுதல் உலகியற்கை. ஆனால் அன்பர் பணி செய்வதையே அல்லும் பகலும் தம் கொள்கையெனக் கொண்டு, எல்லாரும் இன்புற்றிருத்தலையே எண்ணித் தம் வாழ்நாட்களைப் பிறர்க்கு அர்ப்பணம் செய்து வாழ்பவரே 'பெரியார்' எனப்படுவர். அத்தகையவர் பலர் நம் நாட்டில் தோன்றி மறைந்தனர். அப்பெரியார்களின் வாழ்க்கை விவரங்களை ஒவ்வொருவரும் அவசியம் வாசித்துணரல் வேண்டும். பெரியார்களின் வாழ்க்கை

விவரங்கள் நம் வாழ்வினைப் பண்படுத்த வல்ல சிறந்த சாதனங்களாக இருக்கும். அத்தகைய வரலாறுகளுள் ஈஸ்வர சந்திர வித்தியா சாகரர் வரலாறு ஒன்ருகும்.

வங்காள மாகாணத்தில், மிதிணப்பூர் ஜில்லாவில், ஹுக்ளி நதிக் கரையில் பிர்சிங்கா என்ருெரு சிறிய கிராமம் உண்டு. அந்தக் கிராமத்தில் 1820-ஆம் ஆண்டு—செப்டெம்பர் மாதம் 26-ஆந் தேதி ஈஸ்வர சந்திரர் பிறந்தார். அவர் பிறந்த குடும்பம் 'பந்தோபாத்யாய' என்று கூறப்படும் பிராமண குலத்தின் ஒரு பிரிவாகும். ஈஸ்வர சந்திரரின் தந்தையார் பெயர் தாகூர் தாஸ் பந்தோபாத்யாய என்பது. தாகூர் தாஸ் மாதம் எட்டு ரூபாய் சம்பாதித்த காலத்தில், தமது 23-ஆம் வயதில், சகல நற்குணங்களும் வாய்ந்த பகவதி தேவி என்னும் பெண்மணியை மணந்து கொண்டார். அவர்களுக்குப் பிறந்த முதற் புத்திரரே ஈஸ்வர சந்திரர். பகவதி தேவியார் கருவுற்றிருந்த போது, ஈஸ்வர சந்திரருடைய பாட்டனர் ஒரு கனவு கண்டனராம். அஃதாவது, 'பகவதியார் ஓர் ஆண் மகவு பெறுவார்; அக்குழந்தை உலகம் போற்றத் தொண்டு செய்து உயர் புகழைப் பெறும்' என்பது. அவ்வாறே பிரபல சோதிடர் ஒருவரும் அதுபோது கூறினராம்.

ஈஸ்வர சந்திரர் ஐந்து வயதடைந்தபோது அக்கிராமப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்

டார். அந்தப் பள்ளிக்கூடத்தில் ஈஸ்வர சந்திரர் மூன்றுண்டுகள்வரை படித்தார். அம்மூன்றுண்டு களிலும் ஈஸ்வரர் இயல்பிற் பெற்றிருந்த நுண்ணறிவும், நுணுகி ஆராயும் திறனும், விடா முயற்சியும், இடையரு ஊக்கமும் அப்பள்ளி ஆசிரியரை வியக்கச் செய்தன. இளம்பிராயத்தில் ஈஸ்வர சந்திரர் மிகுந்த சுறுசுறுப்புள்ளவராயிருந்தார். சிறுவராக இருந்த அவரிடம் அக்கிராம வாசிகள் ஒருவித அச்சமும் மரியாதை உணர்ச்சியும் கொண்டிருந்தனர். சிறு வயதில் ஈஸ்வர சந்திரர் சிறிது நேரத்தையும் வீணே கழியவிடாது ஏதேனும் ஒரு வேலையைச் செய்து கொண்டே இருந்தனர்; ஏதாயினும் ஒரு நூலைப் படித்துக்கொண்டே இருப்பது அவர் வழக்கம்.

இவ்வாறு கிராமப் பள்ளிக்கூடத்தில் மூன்றுண்டுகள் பயின்ற ஈஸ்வர சந்திரரை, அவர் தந்தையார், உயர்தரக் கல்விச் சாலையில் சேர்ப்பதற்காகக் கல்கத்தாவிற்கு அழைத்துச் சென்றார். பிர்சிங்கா என்ற கிராமத்திலிருந்து கல்கத்தா ஐம்பத்திரண்டு மைல் தூரத்திலிருக்கிறது. இவ்வைம்பத்திரண்டு மைல் தூரத்தையும் தாகூர் தாசும் அவர் குமாரர் ஈஸ்வர சந்திரரும் நடந்து சென்றே கடந்தனர். அப்போது, ஈஸ்வர சந்திரர் எட்டுப் பிராயந்தான் அடைந்திருந்தார். அவ்வழி நெடுக உள்ள மைல்களைக் குறித்த கற்களிலிருந்து ஈஸ்வர சந்திரருக்கு அவர் தந்தையார் ஆங்கில எண்களைக் கற்பித்தனராம்.

கல்கத்தாவை அடைந்தவுடன், தாகூர் தாஸ் தம் பழைய நண்பர் ஒருவர் வீட்டில் தங்கினர். அந்த வீடு கல்கத்தாவில் 'படா பஜாரி'லிருந்தது. தினந்தோறும் காலை ஒன்பது மணிக்கு வீட்டை விட்டுப் புறப்படும் தாகூர் தாஸ், தம் வேலைகளை முடித்துக் கொண்டு இரவு ஒன்பது மணிக்கே வீடு வந்து சேருவர். அவர் வெளியே போயிருக்கும் சமயங்களிலெல்லாம் ஈஸ்வர சந்திரரை, அவர் தங்கியிருந்த வீட்டுப் பெண்கள் பேரன்புடன் பராமரித்து வந்தார்கள். அவர்களுள் 'ராய் மணி' என்னும் அம்மையார் ஈஸ்வரரை மிகவும் அன்புடன் ஆதரித்து வந்தார். அந்த அம்மையாரின் அன்பை ஈஸ்வர சந்திரர் தம் ஆயுள் முழுவதும் மறந்திலர். செய்ந்நன்றி கொன்ற மகற்கு உய்வில்லை என்பதை ஈஸ்வரர் மிக நன்ருக அறிந்திருந்தார் என்னல் மிகையாகாது.

ஈஸ்வர சந்திரரைக் கல்கத்தா ஹிந்து கலாசாலையிற் சேர்க்கவேண்டும் என்பது தாகூர் தாஸின் விருப்பம். ஆனல், அவ்விருப்பத்தை அவரால் நிறைவேற்ற முடியாமல் இருந்தது. ஏனெனின், ஹிந்து கலாசாலையில் ஈஸ்வர சந்திரர் சேரவேண்டிய வகுப்பின் மாதச் சம்பளம் ஐந்து ரூபாயாக இருந்தது. தாகூர் தாஸ் அதனைக் கொடுக்க இயலாதவர் அல்லரோ? வறுமையில் மூழ்கிய அவருக்கு மாதம் ஐந்து ரூபாய் கொடுத்துத் தம் குமாரரைப் படிக்க வைப்பது முதலில் கடினமாக இருந்தது. அவர்

மாத முழுவதும் உழைத்தாலும் பத்து ரூபாய் வருவாயையே பெறக்கூடிய நிலையில் இருந்தார். அவர் அந்தப் பத்து ரூபாயைக் கொண்டு, நாளடைவில் பெரிதாக வளர்ந்துகொண்டே வந்த தம் குடும்பத்தைக் காப்பாற்றுவரா? தம் குமாரருக்கு மாதம் ஐந்து ரூபாய் சம்பளம் கொடுத்துப் படிக்க வைப்பரா? கல்கத்தாவில் தாமும் தம் குமாரருமாக இருப்பதற்கு ஆகும் செலவைப் பொறுப்பரா? இத்தகைய வறிய நிலையில் ஒரு மனிதன் யாது தான் செய்யக்கூடும்? குடும்பப் பொறுப்பு ஒரு புறமும் வறுமைத் துன்பம் மற்றொரு புறமும் அவரை வாட்டி வதைத்து வந்தன. ஆகலின், தம் மனத்தெழுந்த ஆர்வத்தினை அவர் நிறைவேற்றி வைக்க இயலாதவரானார்.

இந்நிலையில் ஒரு நாள் ஈஸ்வர சந்திரருக்கு 'வயிற்று நோய்' கண்டது. அதைப் போக்கும் வழி ஒன்றும் காணாத தாகூர் தாஸ், ஈஸ்வர சந்திரரை மீண்டும் பிர்சிங்கா கிராமத்திற்கு அனுப்பிவிட்டார். கிராமம் சென்ற ஈஸ்வர சந்திரர் மிகுந்த கஷ்டப்பட்டு, மூன்று மாத காலம் வரை அங்கே இருந்து, அந்நோயினின்றும் சுகமடைந்த பிறகு மீண்டும் கல்கத்தா திரும்பினார்.

இம்முறை தாகூர் தாஸ், ஈஸ்வர சந்திரரை, வடமொழிக் கலாசாலைக்கு அனுப்ப வேண்டுமென்று ஆவல் கொண்டார். அதற்கு அதிகச் சம்பளமில்லை.

அதற்கேற்ப அருகில் குடியிருந்த வடமொழிக் கலா சாலை மாணவர் ஒருவர், தாம் படிக்கும் கலாசாலை யில் ஈஸ்வரரைப் படிக்கவிடின், ஈஸ்வரர் மிகுந்த பயனடைதல் கூடுமென்று விளங்கக் கூறினர். அவ் வடமொழிக் கலாசாலை ஆசிரியர் ஒருவரும் தம் கலாசாலையின் நற்பயனை எடுத்துக் கூறினர். இவற் றைக் கேட்ட தாகூர் தாஸ், தம் குமாரர் வடமொழி யில் வல்லவரானல், பிர்சிங்கா கிராமத்தில் வட மொழிப் பள்ளி ஒன்றை ஏற்படுத்திப் பலர்க்கும் நன்மை செய்வார் என்று எண்ணித் திருப்தியடைந் தார். எனவே, 1829-ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் தேதியன்று ஈஸ்வர சந்திரர் வடமொழிக் கலாசாலையில் சேர்க்கப்பட்டார்.

ஈஸ்வர சந்திரர் சேர்க்கப்பட்ட வடமொழிக் கலாசாலை, ஆங்கிலம் கலவாத தூய இந்திய முறை யில் நடைபெற்று வந்தது. அதன் பயிற்சி முறையில் ஆங்கிலம் அறவே நீக்கப்பட்டிருந்தது. ஆயினும், ஆங்கிலத்தில் பேரார்வம் கொண்டிருந்த அக்கலா சாலை மாணவர் சிலர், அம்மொழியைச் சிறப்பு மொழியாக எடுத்து வேறிடங்களுக்குச் சென்று படித்து வந்தனர். அவ்வடமொழிக் கலாசாலையைப் போன்று, நல்ல பயிற்சி முறைகளுடன் கூடிய வட மொழிக் கலாசாலை ஒன்றை அமைக்கவேண்டு மென்று வங்காள அரசாங்கம் விரும்பியது; அவ்வாறே 1824-ஆம் ஆண்டு வடமொழிக் கலாசாலை ஒன்றை

நிறுவியது. அக்கலாசாலையில் ஆங்கிலமும் வேண்டும் என்பவர்களுக்கு வடமொழியுடன் அதுவும் சேர்த்துப் போதிக்கப்பட்டது. எனவே, மாணவர்கள் பலர் அப்புதிய கலாசாலையிற் சேர்ந்து, பழைய முறைகளை விடுத்துப் புதிய ஆங்கில முறைகளையும் நடை உடை பாவனைகளையும் அப்படியே பின்பற்றத் தொடங்கினார்கள். அப்படி நடப்பதால் இந்தியர் நலன் பெறக்கூடும் என்றும் பலர் நம்பினர். இவற்றிற்கு எல்லாம் காரணர் அக்கலாசாலையின் நான்காம் ஆசிரியராய் அமர்த்தப்பட்டிருந்த வெள்ளையர் ஒருவர் ஆவர். அவர், மாணவர்களை மேனாட்டு நாகரிக முறையிலேயே பெரிதும் திருப்ப முயற்சித்து வந்தார். இதைக் கண்ட வடமொழிப் புலவர்களும் வைதிகப் பெரியார்களும், அதிகமாகக் கண்டிக்கத் தொடங்கினர். அரசாங்க வடமொழிக் கலாசாலையின் விபரீதப் போக்கை அவர்கள் அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்டினார்கள். ஆகவே, சுதேச மக்களின் எதிர்ப்பையே விரும்பாத அரசாங்கம் அக்கலாசாலையையே ஒழித்துவிடுவதற்குப் பதிலாக, அந்த ஆங்கில ஆசிரியரைக் கலாசாலையிலிருந்து விலக்கி விட்டது.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு, ஈஸ்வர சந்திரர் அவ்வரசாங்க வடமொழிக் கலாசாலையில் இலக்கண வகுப்பில் சேர்க்கப்பட்டார். அவரைக் கலாசாலையில் சேர்த்த நாள் முதல் நாள்தோறும் தாகூர் தாஸ்

தம்முடன் கூடவே ஈஸ்வரரைக் கலாசாலைக்கு அழைத்துச் சென்றார்; அவ்வாறே மாலையிலும் கலாசாலையிலிருந்து திரும்புகையில், அவரை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்தார். தாகூர் தாஸ் இவ்வாறு செய்தமைக்குக் காரணம் யாது? இவ்வாறு செய்தமையால் ஈஸ்வரர் வழிதவறி விடுவதோ, சோம்பேறிப் பிள்ளைகளுடன் கூடிக் கெடுவதோ முடியாதென்பதே அவருடைய எண்ணமாகும்.

அந்தக் காலத்தில் கலாசாலையில் மேஜை நாற்காலிகள் கிடையா. சிறு பாய்களின்மீது தரையிலேயே மாணவர்கள் அரை வட்டமாக அமர்ந்திருப்ப, நடுவில் ஆசிரியர் அமர்ந்திருந்தனர். இக்காட்சி, இடையில் ஒரு நக்ஷத்திரத்துடன் ஒளிரும் அரை வட்ட மதியைப் போல் இருந்தது. ஈஸ்வர சந்திரர் தம் தந்தையாருடன் கலாசாலைக்குப் போவதும் வருவதுமாக இருந்தமையால், சோம்பேறிப் பிள்ளைகளின் நட்பு முதலில் அவருக்கு ஏற்படவில்லை. இவ்வண்ணம் சில நாட்கள் சென்றதும் ஈஸ்வர சந்திரருக்குக் கலாசாலையின் வழி நன்றாகத் தெரிந்தது என்பதைத் தாகூர் தாஸ் அறிந்தனர்; ஈஸ்வரருடன் கூடச் செல்வதை ஒழித்தனர். ஈஸ்வரரும் தாம் வெறுத்து ஒதுக்கவேண்டிய ஒரு கூட்டத்தாரை—சோம்பேறிகளை—அறிந்து கொள்ளச் சந்தர்ப்பம் பெற்றார்; அறிந்ததும், சோம்பேறிகளுடன் கூடாமல் இருந்துவிட்டார்.

கலாசாலையில் ஆசிரியர்கள் அனைவரும் ஈஸ்வர சந்திரர்மீது மிக்க அன்பு கொண்டிருந்தனர். ஆசிரியர்கள் மெச்சும்படி ஈஸ்வரர் தம் பாடங்களை நன்கு கப் படித்தனர். வீடு சென்றவுடன், ஈஸ்வரரின் தந்தையார் இரவில் நெடு நேரம் வரை விழித்திருந்து அவரைப் படிக்கச் செய்தார்; பாடங்களைப் போதித்தார்; மனப்பாடம் செய்து பாராமல் ஒப்புவிக்கச் செய்தார். இத்தகைய முயற்சியின் பயனாக ஈஸ்வர சந்திரரும் மிகுந்த கஷ்டப்பட்டுப் படித்துக் கலாசாலையில் நற்பெயர் பெற்றார். குறும்பு செய்யும் குணமுடைய மாணவர் சிலர் ஈஸ்வரரின் பெருந் தலையையும் சிறிய உடலையும் கண்டு ஏளனம் செய்தனர். எனினும் ஈஸ்வரர் எவர்மீதும் கோபங்கொண்டிலர்; ஏளனத்தால் ஆத்திரமடைந்திலர்; தம் காரியத்திலேயே கண்ணுங் கருத்துமா யிருந்தார். இவ்வாறாக அந்த அரசாங்க வடமொழிக் கலாசாலையின் இலக்கண வகுப்பில் ஈஸ்வரர் மூன்றாண்டுகள் கழித்தார். அம்மூன்றாண்டுகளிலும் அவர் பெற்ற பரிசுகள் பல. ஈஸ்வரர் அம்மூன்றாண்டுகளுக்கு இடையில் இரண்டாம் ஆண்டில் ஆறுமாத காலம் ஆங்கிலமும் பயின்றார்; ஒழுங்காகப் போதிக்கப்படாத காரணத்தால் அம்மொழி பயிலுவதை விரைவில் விட்டொழித்தார்; பின் ஆறுமாத காலத்தில் 'அமர கோசம்' என்ற வடமொழி நிகண்டு நூலை மனப்பாடமாகப் படித்து முடித்தார்.

மேல் வகுப்புக்குப் போன போது ஈஸ்வாருக்கு வயது பதினென்று. அவர் தோற்றத்தில் மிகச் சிறியவராயும் மெலிந்தவராயும் இருந்தமையால், அவ் வகுப்பில் அவரைச் சேர்த்துக் கொள்வதற்கு அவ் வகுப்பு ஆசிரியர் மறுத்தார்; ஆயினும் அவருடைய அளவு கடந்த ஆற்றலையும் திறமையையும் நுட்ப அறிவினையுங் கண்டு வியந்தவராய் அவரை மேல் வகுப்பிற் சேர்த்துக்கொண்டார். ஈஸ்வரர் முதல் ஆண்டு, ரகுவம்சம், குமார சம்பவம், ராகவ பாண்டினியம் போன்ற வடமொழி நூல்களைப் பயின்று முதற் பரிசு பெற்றார்; இரண்டாம் ஆண்டு மகா பரணி, சாகுந்தலம், மேக தூதம், உத்தர ராம சரித்திரம், விக்கிரம ஊர்வசி, காதம்பரி, தசகுமார சரித்திரம், முத்ர ராக்ஷஸன் என்னும் அழகிய வடமொழி நாடக, காவிய நூல்களை எல்லாம் படித்து, வல்லவரானார்; இவற்றுடன் அழகாக எழுதுவதிலும் வன்மை பெற்றார்; வடமொழியில் தெளிவாகப் பேசும் ஆற்றல் பெற்றார். அழகிய கட்டுரைகள் வரைவதில் ஈஸ்வரருக்குநிகர் வேறெவரும் அவ்வகுப்பில் இல்லை; அவ்வகுப்புக் கல்விக்குத் தக்க நிலையில் ஈஸ்வரர் சிறு கவிகள் சிலவும் புனைந்தனர்; மொழி பெயர்ப்பதிலும் திறமை பெற்றனர்.

ஈஸ்வர சந்திரர் பதின்மூன்று வயதடைந்த போது, வடமொழி இலக்கணத்திலும் இலக்கியத்திலும் தகுந்த புலமை பெற்றிருந்தார்; அழகிய கவி

கள் புனையும் ஆற்றலும் அடைந்திருந்தார். அச்சமயத்தில் கலாசாலையில் விடுமுறை விடப்பட்டது. அக்காலங்களில் ஈஸ்வர சந்திரர் தமது கிராமமாகிய பிர்சிங்காவுக்குச் சென்று வருவது வழக்கம். விடுமுறையில் ஈஸ்வரர் கிராமத்திலிருந்த போது, அக்கிராமச் செல்வர் ஒருவர் வீட்டில் ‘ சிரார்த்தம் ’ வந்தது. அச்செல்வர் அதற்கு ஒரு கவி பாடல் வேண்டுமென்று ஈஸ்வரரை வேண்டினர். ஈஸ்வரர் அதற்கிசைந்து ஒரு கவி புனைந்து அளித்தார். அந்தச் சிரார்த்தச் சடங்கிற்கு ஏராளமான பண்டிதர்களும் பணக்காரர்களும் வந்திருந்தனர். அக்கூட்டத்தின் ஒரு மூலையில் ஈஸ்வர சந்திரரும் அமர்ந்திருந்தார். அத்தகைய பெருங் கூட்டத்தில் ஈஸ்வரர் புனைந்து அளித்த கவி படிக்கப்பட்டது. அக்கவியின் அழகைப் புலவர்கள் வியந்து, அதனை எழுதிய ஈஸ்வரரின் திறமையைப் பாராட்டிப் புகழ்ந்து ஆசி கூறினர்கள்.

கல்கத்தாவில் இருந்த போது ஈஸ்வரர் தாமே நாள் தோறும் கடைக்குப் போய்க் காய் கறிகள் வாங்கி வந்தார் ; விறகு வெட்டினர் ; சமையல் செய்தார்; தம் சகோதரனுக்கும் தந்தையாருக்கும் தாமே அமுது படைத்தார் ; இத்தனை வேலைகளுக்கு இடையிலும், சமையல் செய்து கொண்டிருந்த போதும், ‘ஏட்டைக் கைவிடேல்’ என்றபடி, நூல்களை அருகில் வைத்துப் படித்துக்கொண்டே இருந்தார். ஈஸ்வரர்

இரவில் இரண்டு மணி நேரமே தூங்கினுர். அஃதாவது இரவு பத்து மணி வரையிலும் படித்துக்கொண்டிருந்தார். அவர் தந்தையார் தினந்தோறும் இரவு பன்னிரண்டு மணிவரை தம் காரியாலயம் பற்றிய வேலைகளைச் செய்துகொண்டிருந்தார். எனவே, இரவு பன்னிரண்டு மணிக்குத் தம்மை எழுப்பிவிடுமாறு ஈஸ்வரர் தம் தந்தையாரை வேண்டிக்கொண்டார். இங்ஙனம் ஈஸ்வரர் நாள்தோறும் இரவு பன்னிரண்டு மணிக்கு விழித்துக்கொண்டு பொழுது விடியுமட்டும் தம் பாடங்களைப் படித்துக்கொண் டிருந்தார். அதன் பின்னர், காலைக் கடன்களைப் பூர்த்தி செய்து கொண்டு, சமையல் வேலைகளை முடித்துக் கலாசாலைக்குச் சென்ருர். போகும் வழியிலும் ஈஸ்வரர் தம் பாடங்களைப் படித்துக்கொண்டே போனுர். இவ்வாறு ஈஸ்வரர் ஒரு மனித இயந்திரம் போன்று இடைவிடாமல் வேலை செய்துகொண்டிருந்தார்.

ஈஸ்வரரின் குடும்பம் மிகவும் வைதிகக் கொள்கை உடையது. இந்நவீன கால முறைகளை அக்காலத்தில் அம்மக்கள் சற்றும் அறிந்திலர். எனவே அவர் பெற்ருேர், அவர் பதினுன்கு வயதை அடைந்தவுடன் அவருக்குத் திருமணம் செய்துவிடத் துணிந்து, ‘ தினமாயீ தேவி ’ என்னும் எட்டு வயது நிறைந்த எழில் மிகு சிறுமியை மணம் புரிவித்தனர். திருமணம் ஆகியும் ஈஸ்வரர் தம் படிப்பை நிறுத்தினரில்லை ; மேன்மேலும், இரவுகளில் நெடு

நேரம் வரை விழித்திருந்து நன்ருகப் படித்து, கலா சாலையில் முதற்றர மாணவராக விளங்கினுர். இவ் வண்ணம் இடைவிடாமல் படிப்பதையே ஈஸ்வரர் கருத்தில் கொண்டாரே யன்றித் தம் உடல் நலத் தைக் கவனித்திலர் ; உடல் உரமாயிருக்கத் தக்க பயிற்சி முறைகளை அவர் செய்திலர் ; உடலுக்கு உர மூட்டும் உணவு வகைகளும் அவருக்குக் கிடைப்பது அரிதாயிருந்தது. எனவே, அவர் பிணிவாய்ப்பட் டார்.

உடல் நலமுற்றதும், ஈஸ்வர சந்திரர் கல்கத்தா அடைந்தார். இம்முறை ஈஸ்வரருக்குச் சொற் பொழிவு ஆற்றும் திறனடைதல் வேண்டுமென்ற அவா உதித்தது. ஆகையால் பிரசங்க வகுப்பில் ஈஸ் வரர் சேர்ந்துகொண்டார். அப்போது அவருக்கு வயது பதினைந்து தான் ஆயிற்று. அதில் சேர்ந்த ஒரே ஆண்டில் சொற்பொழிவு ஆற்றுதல் சம்பந்தமான இரு பெரிய நூல்களை ஈஸ்வரர் வாசித்து முடித்துவிட் டார். அந்தச் சமயத்தில்தான் மாதம் எட்டு ரூபாய் கிடைக்கக் கூடிய உபகாரச் சம்பளம் ஒன்று அவருக்குக் கிடைத்தது. அதன்பின் அவர் 1837-ம் ஆண்டு " ஸ்மிருதி " வகுப்பில் சேர்ந்தார் ; இரண்டு மூன்று வருட காலம் படிக்கவேண்டிய ஸ்மிருதி பற் றிய நுணுக்கங்களை எல்லாம் ஆறு மாத காலத்திற் குள்ளேயே நன்முறையிற் பயின்று தேர்ச்சி பெற்ருர்.

## 2. இளமையிற் சீர்திருத்த நோக்கம்

ஈஸ்வர சந்திரர் ஸ்மிருதியில் நல்ல தேர்ச்சி பெற்ற சில நாட்களுக்குள் திப்பேராவில் ஒரு 'சட்ட ஆலோசனைக் கர்த்தா' (Juris Consult) பதவி காலி யாயிற்று. அதற்கு ஈஸ்வர சந்திரர் மனுப் போட் டார். அப்பதவி அவருக்குக் கிடைத்தது. ஆனல், அவர் போக வேண்டிய இடம் மிகவும் தூரத்தில் இருந்தபடியால் அப்பதவி ஏற்பதைத் தாகூர் தாஸ் விரும்பவில்லை. தந்தை சொல் தட்டாத் தனயர் வேறு வழியொன்றும் இன்றி அப்பதவியை மறுத்து விட்டார். பின்னர், ஈஸ்வர சந்திரர் வேதாந்த நூல் கள் பயிலத் தொடங்கினர். அவருக்கு வேதாந்த நூல்கள் கற்பித்த ஆசிரியர், நரை திரை மூப்பு அடைந்தவர்; மனைவி இழந்தவர்; ஆனல், மீண்டும் ஒரு பெண்ணை மணந்து கொள்ள வேண்டுமென்று பெரிதும் விரும்பினர். அவர் ஒரு நாள் தமது எண் ணத்தை ஈஸ்வரரிடம் கூறினர். ஈஸ்வரருக்கு இச் செய்தி பெரும் நடுக்கத்தை உண்டாக்கியது. இவ் வளவு பழுத்த கிழவரை மணந்து கொள்ளும் பெண் மணியின் துர்ப்பாக்கியத்தை எண்ணி அவர் வருந் தினர். அவரை எவள் மணந்த போதினும் விரை வில் விதவையாவது நிச்சயம் என்பது ஈஸ்வரர்

மனத்தில் தெளிவாகத் தோன்றியது. அதனால் அவர், எப்படியேனும் அந்தத் திருமணத்தை நடக்க ஒட்டாமற் செய்தல் வேண்டுமெனத் தீர்மானித்தார். ஆனால் அந்த முதியவர், எவ்வாறேனும் தாம் மணம் புரிந்து கொள்ளல் வேண்டுமென்று பிடிவாதத்துடன் இருந்தமையால், எல்லாத் தடைகளையும் அசட்டை செய்து, ஓரழகிய சிறு பெண்ணை மணந்துகொண்டார். இவ்வாறு மணமான சில நாட்களுக்குள் அம்முதியவர், மூப்பாலும் பிணியாலும் வருந்தி, தம் இள மனைவியை அல்லற்பட விட்டு இறந்தார். அந்தோ ! வாழ்க்கை இன்னதுதான் என்பதை உணரும் பருவத்தில் அச்சிறுமி விதவை ஆனாள். மணவாழ்க்கை இன்பத்தின் சாயலையும், விதவைத் தன்மையின் கருத்தையும் அறியமாட்டாத அச்சிறுமியின் துயரக் காட்சி ஈஸ்வர சந்திரர் மனத்தில் வேரூன்றிப் பதிந்துவிட்டது. அவர், இத்தகைய அவகேட்டை இந்நாட்டினின்றும் ஒழிக்கவேண்டும் என்பதைத் தம் மனத்தில் உறுதி செய்துகொண்டார்.

ஈஸ்வரர் வேதாந்தம் படித்த பின்னர், நியாய சாத்திரங்களைக் கற்றுணர்ந்தார்; நியாய சாத்திர மாணவராய்ப் பயின்றுகொண்டிருந்த போது, இலக்கண வகுப்பில் இரண்டுமாத காலம் வரை உதவி ஆசிரியராய் அமர்ந்து வேலை பார்க்கலானார். அதன் மூலம் அவருக்கு மாதம் நாற்பது ரூபாய் விகிதம் இரண்டு மாத காலத்திற்கு எண்பது ரூபாய்

கிடைத்தது. 1841-ஆம் ஆண்டு முடிய, ஈஸ்வர சந்திரர் தம் கல்விப் பயிற்சியை முடித்துக்கொண்டார். அப்போது அவர், ‘கல்விக் கடல்’ என்று பொருள்படும் ‘வித்தியா சாகரர்’ என்னும் பட்டம் தரப் பெற்றுப் பெருமைப்படுத்தப்பட்டார். இவ்வண்ணம் அவர் எட்டாம் வயதில் வட மொழிக் கலாசாலையில் சேர்ந்து, இருபதாம் வயதிற்குள் வட மொழிப் புலமை மிகுந்து, வடமொழிக் கலா வல்லுநராய்—வித்தியா சாகரராய் விளங்கினர் எனின், அவருடைய விடா முயற்சியையும் நுண்மதியையும், பேரூக்கத்தையும் என்னென்று உரைப்பது !

1838-ஆம் ஆண்டு ஈஸ்வரர் வடமொழிக் கலாசாலையில் படித்துக்கொண்டிருக்கையில், பூமியின் வடிவத்தையும் விளக்கத்தையும் பற்றிப் புராதன ஹிந்து புராணங்களையும், சூரிய சித்தாந்தத்தையும், ஐரோப்பிய நவீன காலச் சித்தாந்தங்களையும் ஆதாரங்களாகக்கொண்டு வடமொழியில் சொற்சுவை, பொருட்சுவை, அணிகள் மிகுந்த அழகிய கவிகள் நூறு புனைவோருக்கு ரூபாய் நூறு பரிசு அளிக்கப்படும் என்று ஜான் மேயர் என்பவர் அறிவித்திருந்தார். அக்காலத்தில் மேனாட்டினரும், ஐரோப்பிய மக்களும் வடமொழியில் மிக்க கவனம் செலுத்தினர் ; வட மொழியை நன்கு படித்தனர் ; பலர் அதிற் புலமையும் பெற்றிருந்தனர். அவர்களுடன் மேயரின் பரிசைப் பெறுவதற்காக, அந்தக்

கவி புனையும் போட்டியில் ஈஸ்வர சந்திரரும் கலந்து கொண்டார். இறுதியில் ஈஸ்வரர் யாத்த கவிகளே சிறந்தனவாகக் காணப்பட்டு, நூறு ரூபாய் வெகுமதி ஈஸ்வரருக்கு அளிக்கப்பட்டது.

ஈஸ்வர சந்திரர், கலாசாலையில் படித்துக்கொண்டிருந்த நாட்களில் வறுமைப்பேய் அவரது குடும்பத்தையே அச்சுறுத்திக்கொண்டிருந்தது. காலையில் காலணு அரிசியில் ஏதாயினும் செய்து நான்கு பேர் சாப்பிடுதல் வழக்கம். சிற்சில நாட்களில் அஃதும் கிடைத்திலது. ஈஸ்வர சந்திரர் வசித்த வீடோ கொசுகுகளும் பூச்சிகளும் அருகில் ஓடும் கால்வாயின் துர்நாற்றமும் கூடிப் பொறுக்கமுடியாத இடத்தில் அமைந்திருந்தது. இவ்வளவு துன்பங்களுக்கு இடையே இருந்தும், ஈஸ்வரர் பிறர் துயரங் கண்டு மனம் பொறார்; தமக்கு வந்த உபகாரச் சம்பளத்தைக்கொண்டு வறுமையில் வாடிய பிறர்க்கு உதவி செய்யும் குணம் அவரிடம் இயல்பாக அமைந்திருந்தது. அவர், தம் கையில் காசில்லாவிடின், தம்மை வந்து அண்டினவர்களுக்கு ‘இல்லை’ என்னுமல் கடன் வாங்கியேனும் உதவி புரிந்து அனுப்பிவைத்தார். அவர், எத்துணைக் கொடிய பிணியாளராயினும் தொத்துநோய் வாய்ப்பட்டவராய் இருந்தபோதினும் அத்துன்ப நிலையாளர்க்கு அன்பு காட்டவிற் பின் வாங்குதல் இல்லை. அவர், பிணிகளுக்கோ, மற்றைத் துயரங்களுக்கோ, வறுமையின் கொடுமை

களுக்கோ ஆளாகாமல் அவற்றை எதிர்த்து நின்று புறமுதுகு காட்டி ஓடச்செய்யும் போர்வீரனே போல, வறுமையிலும் செம்மையாகத் தம் வாழ்வை நடத்திச்சென்றார்.

மானிடர் படுந்துயரம் ஈஸ்வரர் மனத்தில் பெரிய மாறுதல்களைச் செய்துவிட்டது. வசிக்க வீடின்றித் தெருக்களில் அலைந்து திரிவோரும், அனாதைகளும், ஆதரவற்றவர்களும் ஈஸ்வர சந்திரரைப் பெரிதும் மாற்றிவிட்டனர். அவர்களுடைய இடுக்கண்களும் அவதி நிலையுமே ஈஸ்வரரின் மனக் கண்முன் தோன்றிக்கொண்டிருந்தன. அவர், மக்கட் குழுவின் துயர் களைந்து, நம் நாட்டு ஏழை மக்களின் வறுமையை ஓட்டி, அவர்கள் எல்லோரையும் முன்னேற்றுவிக்கத் தம் உயிரையும் அர்ப்பணம் செய்யத் துணிந்திருந்தார். அவரது மனத்தில் பேதம் தொலைந்தது; 'மனிதர் அனைவரும் ஓரினத்தவரே' என்பதை அவர் உணர்ந்தார்; சாதி சமயச் சழக்குகளை வெறுத்தார்; உயர்வு தாழ்வு என்னும் அகந்தையை இகழ்ந்தார்; பிறப்பில் உயர்வு தாழ்வு கற்பிப்பது அநீதி, அக்கிரமம், அவமானம், நாட்டிற்குக் கேடு இழைப்பதாகும் என்று கருதினார்; வறுமைத் துன்பமோ, பிணியோ, மூப்போ, சாக்காடோ, மேலோர்—கீழோர் என்ற பேதங் கருதிப் பிடிப்பதில்லை என்பதை நன்கு அறிந்தார்; இவற்றைப் பிறர்க்கும் அறிவித்தார்.

ஈஸ்வர சந்திரர் மனம் இரக்கம், கருணை, அன்பு என்பவற்றாலேயே ஆக்கப்பட்டிருந்தது. அவர் அச்சிறு வயதிலேயே ஒப்பற்ற சீர்திருத்தக்கார ராய் விளங்கினார். வைதிகரின் எதிர்ப்புக்கோ, மற்றையோரின் கண்டனத்துக்கோ அவர் சிறிதும் அஞ்சினாரில்லை. தம் மனத்தில் தோன்றும் உண்மையை வெளியிடுவதில் அவர் என்றும் பின் வாங்கினார் இல்லை; அஞ்சி ஒடுங்கினார் இல்லை; உண்மை நெறியையும், அன்பர் பணி ஆற்றுதலையும் சுத்த சமரஸ சன்மார்க்க நெறியைக் கடைப்பிடித்து, மக்களுக்கு அதைப் போதித்து வைப்பதையுமே தம் கடனாகக் கொண்டிருந்தார்.

## 3. தியாக புருஷர்

**வ**ங்காளத்தில், கிழக்கிந்தியக் கம்பெனியில் உத்தியோகம் செய்த ஆங்கிலேயர்களுக்கு இந்திய மொழி ஒன்றைக் கற்றுக்கொடுக்க வேண்டி, கல்கத்தாவில் 'வில்லியம் கோட்டைக் கலாசாலை' என்ற பெயருடன் 1800-ஆம் ஆண்டு ஒரு கலாசாலை நிறுவப் பட்டிருந்தது. 1841-ஆம் ஆண்டு இறுதியில் அதன் தலைமை வட மொழிப் புலவர் இறந்துவிடவே, அப் பதவி காலியானது. அதுபோழ்து, ஈஸ்வர சந்திரரின் புகழ் சிறிது பரவி இருந்தமையால், வில்லியம் கோட்டைக் கலாசாலைக் காரியதரிசியான மார்ஷல் என்பார், ஈஸ்வர சந்திரரை அப்பதவியில் நியமிக்க விரும்பினர். எனவே 1841-ஆம் ஆண்டின் இறுதியில் மாதம் 50 ரூபாய்ச் சம்பளத்தில் ஈஸ்வர சந்திரர் வில்லியம் கோட்டைக் கலாசாலைத் தலைமை வடமொழிப் புலவராக உத்தியோகம் ஏற்றார்.

வடமொழியில் மட்டும் புலமை பெற்றிருந்தது ஈஸ்வரருக்குத் திருப்தியாக இல்லை. ஆங்கிலம் கற்றுக்கொள்ள வேண்டுமென்று அவருக்குப் பெரு விருப்பம் இருந்துவந்தது. அந்த வில்லியம் கோட்டைக் கலாசாலையில் வடமொழி, வங்காளி, ஹிந்தி ஆகிய மொழிகளும் போதிக்கப்பட்டன. அம்மொழிகளில் ஆங்கிலேயர்கள் எழுதியவற்றைத் திருத்துவது

தான் ஈஸ்வரருடைய வேலையாயிருந்தது. அவருக்கு ஹிந்தி தெரியாதிருந்தது; எனினும் அவர் மிக விரைவில் அம்மொழியைச் செம்மையாகப் பயின்றார்; ஒழிந்த நேரங்களில் ஆங்கிலம் பயின்று வந்தார். வங்காளத்தில் பிரபல தேசியத் தலைவராய் மிளிர்ந்து, காலஞ்சென்ற 'பாபு சுரேந்திரநாத் பானர்ஜீ'யின் தந்தையாகிய பாபு துர்க்கா சரண் பானர்ஜீ, ஈஸ்வரரிடம் அன்பு கொண்டவர். அவர், தம் ஓய்வு நேரங்களில் ஈஸ்வரர்க்கு ஆங்கிலம் கற்பித்து வந்தார். ஈஸ்வரருக்கு ஆங்கிலம் போதிக்க ஆரம்பித்த பாபு துர்க்கா சரண் பானர்ஜீ வேறொரு பள்ளிக்கூடத்தில் குமாஸ்தாவாக இருந்தார். ஆனால், பாபு பானர்ஜீக்கு வருவாயை உயர்த்தவும் தமக்கு ஆங்கிலத்தில் முதல் ஆசிரியராயிருக்கும் அவரிடம் தம் நன்றியைக் காட்டவும் தம் அருகிலேயே அவரை வைத்துக் கொண்டு மேலும் சிறப்பாக ஆங்கிலம் படிக்கவும் ஈஸ்வரர் கருத்துக்கொண்டு, அவரை வில்லியம் கோட்டைக் கலாசாலையின் தலைமைக் குமாஸ்தாவாக மாற்றிக்கொண்டார்.

ஈஸ்வரருக்கு வடமொழியில் மிகுந்த புலமை இருந்தமையால் அவர், சாதாரண மக்களும் அம்மொழியைச் சுலபமாகப் படிப்பதற்குரிய வழி காணப் பலவாறு முயன்று வந்தார்; வடமொழி இலக்கணம் ஒன்றை வங்க மொழியில் எளிதாகப் படிக்கத் தக்கவாறு எளிய முறையில் எழுதினார்.

அவருக்கு எழுத்து வன்மை மிக்கிருந்தாற் போலவே கற்பிக்கும் திறமையும் மிகுதியாக இருந்தது. இச் சக்தியைக் கண்ட அறிஞர் பலர் எப்பொழுதும் அவரைச் சூழ்ந்தவண்ணமாகவே இருந்து, பல அரிய விஷயங்களை எல்லாம் அறிந்துகொண்டனர். அவர் கற்பித்த முறை புதிதாகவும் படிப்போர் எளிதில் அறிந்துகொள்ளக் கூடியதாகவும் இருந்தது. ஆதலின், ஈஸ்வருடைய புலமைத் திறனும் புகழும் வங்காள மாகாணம் எங்கும் பரவலாயின.

நீதியும், ஒழுங்கும், நேர்மையும், உண்மையுமே ஈஸ்வரர் விரும்பின முக்கிய நற்குணங்களாயிருந்தன. ஒரு முறை, வில்லியம் கோட்டைக் கலாசாலைத் தலைவர் ஆங்கில மாணவர்களின் விடைத்தாள்களைக் கவனித்து, அவர்களுக்குச் சிறிது அதிகமாக 'மார்க்' கொடுக்க வேண்டுமென்று ஈஸ்வரரிடம் கூறினர். ஆனல் ஈஸ்வரர், நீதியில்லாத ஒன்றை, அஃது எத்தகைய காரியமா யிருந்தபோதினும் தாம் செய்தல் முடியாது என்று மரியாதையாகவும் தைரியமாகவும் மறுத்துக் கூறிவிட்டார்; வற்புறுத்தப்படின், தம் வேலையைவிட்டு விடுவதாகவும் கூறினர். நேர்மைக் குணமுள்ள மார்ஷல் துரை, ஈஸ்வரரின் மேன்மையான குணத்தையும் உறுதியையும் தைரியத்தையும் பாராட்டிப் புகழ்ந்தார்; கலாசாலையை விட்டு விலகல் வேண்டாமென்றும், தாம் அவ்வாறு வற்புறுத்த விரும்பவில்லை என்றும் கூறினர்.

ஈஸ்வரரின் உண்மை நிலையையும் மன உறுதியையும் எடுத்துக் காட்ட இது போன்ற சம்பவங்கள் பல அக் காலத்தே நடைபெற்றன.

ஈஸ்வர சந்திர வித்தியா சாகரரின் கல்வித் திறனைக் கண்ட மார்ஷல் துரை, அவரிடம் வடமொழி பயிலத் தொடங்கினர். அவர் போலவே அரசாங்கக் கல்விக் கழக (Education Council) அமைச்சரா யிருந்த டாக்டர் மோவட் என்பவரும் ஈஸ்வரருடன் நட்புப்பூண்டு, வடமொழி பயின்றார்; வடமொழியில் தமக்கெழுந்த ஐயங்கள் அனைத்தையும் ஈஸ்வரரிடமே வினவி அறிந்துகொண்டார். அவ்வமயம் இந்தியா வின் அரசப் பிரதிநிதியாயிருந்த ஸர் ஹென்றி ஹார் டிஞ்ச் என்பார் ஒரு முறை, வில்லியம் கோட்டைக் கலாசாலையைச் சென்று பார்வையிட்டார். அவருக் கும் ஈஸ்வரரிடம் அளவு கடந்த அன்பு தோன்றிவிட் டது; நெடுநேரம் வரை அவ்வரசப் பிரதிநிதி ஈஸ்வர ருடன் கல்வி அபிவிருத்திச் சம்பந்தமாக அளவளா விப் பேசிக்கொண்டிருந்தார்.

இவ்வாறு ஈஸ்வர சந்திரர் அரசப் பிரதிநிதி யுடன் கல்வி வளர்ச்சி பற்றிப் பேசியதன் பயனாக, வங்காளமெங்கும் 'ஹார்டிஞ்ச் பள்ளிக்கூடங்கள்' என்ற பெயரால் ஏறக்குறைய நூறு பள்ளிக்கூடங் கள் நிறுவப்பட்டன. அவ்வாறு நிறுவப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக் கும் பொறுப்பு ஈஸ்வர சந்திரரிடமும் மார்ஷலிடமும்

வந்தடைந்தது. ஈஸ்வரர் பார பட்சமின்றித் திறமை உடையவர்களையே ஆசிரியர்களாகத் தேர்ந் தெடுத்தார்.

ஈஸ்வரரின் தந்தையார் வயது முதிர்ந்தவர்; எனவே, அவரால் மேலும் உழைத்துச் சம்பாதித்துப் பொருள் தேட முடியவில்லை. ஈஸ்வர சந்திரரின் குடும்பமோ மிகப் பெரியது. அங்ஙனம் இருந்தும் ஈஸ்வரர் தம் தந்தையாரை வேலையை விட்டு நிற்குமாறு வற்புறுத்தி, பிர்சிங்கா கிராமத்திற்கு அனுப்பி விட்டார்; தமக்கு மாதந்தோறும் கிடைத்த ஐம்பது ரூபாயில் இருபது ரூபாயைத் தம் தந்தையாருக்கு அனுப்பி வந்தார்; மிகுந்த முப்பது ரூபாயில் ஒன்பது பேருள்ள தம் குடும்பத்தை மனக் குறையின்றி நடத்திச் சென்றார். 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்பது அவர் விஷயத்தில் மிகப் பொருத்தமான ஒரு சொற்றொடர் ஆகும். இந்தச் சொற்ப வருவாயைக் கொண்டு அவர் தம் குடும்பத்தை நடத்தி வருகையில், இடையிடையே வந்து சென்ற விருந்தினர்க்குக் குறைவில்லை. இந் நிலைமையில் அவர் குடும்பம் பெருங்கஷ்டங்களிடையே சலிப்பும் வெறுப்புமின்றி உற்சாகமாகவே நடந்து வந்தது. ஈஸ்வரர் வீட்டில் சமையற்காரன் இல்லை; வேலைக்காரன் இல்லை. இவ்வொன்பதின்மருள் ஒவ்வொருவராக முறை வைத்துக்கொண்டு, சமையல் செய்தனர். தம் முறை வந்த போதெல்

லாம் ஈஸ்வரரும் மிகுந்த உவப்புடனும் உற்சாகத்துடனும் சமையல் வேலை செய்துவந்தார். ஈஸ்வரருக்கு இத்துணை இடுக்கண்கள் பண விஷயத்தில் இருந்த போதிலும் ஏழைகள், ஏழை மாணவர்கள், திக்கற்றவர்கள் முதலியோர் அவரிடம் பண உதவி பெற்றே வந்தனர்.

ஈஸ்வரரிடம் பேராசையோ பொருள் திரட்ட வேண்டுமென்பதில் நோக்கமோ மருந்துக்கும் இருந்ததில்லை. குடும்பத்தில் கஷ்டம் அதிகம். வருவாயோ குடும்ப நிர்வாகத்திற்குப் போதியதாக இல்லை. அவர் இத்துணைக் கஷ்டமான நிலையில் உழன்றுகொண்டு இருந்தபோது, வில்லியம் கோட்டைக் கலாசாலையில் மாதம் தொண்ணூறு ரூபாய் வருமானமுள்ள இலக்கண ஆசிரியர் வேலை ஒன்று காலி ஆனது. மார்ஷலும் டாக்டர் மோவட்டும் அவ்வேலையை ஈஸ்வரருக்கே கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்தனர். ஆனால், ஈஸ்வரர் அதனை நன்றி அறிதலுடன் மறுத்துவிட்டார். ஏனெனின், இலக்கண ஆசிரியர் பதவி ஒன்று காலி ஏற்படுமென்பது முன்னதாகவே அவருக்குத் தெரியும்; அதனை, 'தாரநாத்' என்ற பெயருடைய தம் நண்பர் ஒருவருக்குத் தருவதாக முன்னரே வாக்குறுதி அளித்துவிட்டார். அளித்த வாக்கைக் காப்பதில் அவர் என்றும் தவறியதில்லை. ஆதலின் அவர், அப்பதவி மிகுந்த வருவாய் தரக்கூடியதாயிருந்தும், அதனை விரும்பா

மல் ஒதுக்கித் தள்ள வேண்டியவரானார். இஃதன்றோ ‘ தியாகம் ’ என்பது ?

இதில் பிறிதொரு சிறப்பும் உண்டு : ஈஸ்வரரின் நண்பரான தாரநாத், கல்கத்தாவுக்கு ஐம்பது மைல் தூரத்திலுள்ள ‘ கால்னு’வில் இருந்தார். தாரநாத்தினிடமிருந்து வேலைக்காக மனு ஒன்று கலாசாலைத் தலைவருக்கு வந்து சேர வேண்டியது அவசியமாயிருந்தது. அந்தக் காலத்தில் ஒழுங்கான தபால் வசதிகள் இல்லை. ரயில் வண்டிப் போக்கு வரவும் சரியாக இல்லை. எனவே ஈஸ்வரர், அந்தக் ‘ கால்னு ’ கிராமத்திற்குக் கால் நடையாகவே புறப்பட்டுச் செல்ல உறுதி செய்துகொண்டார். அவர், ஐம்பது மைல் தூரம் நடக்க வேண்டுமே என்பதில் சற்றேனும் அச்சங்கொண்டிலர் ; தாமதமின்றி உடனே புறப்பட்டார் ; சனியன்று மாலை புறப்பட்டவர், ஐம்பது மைல் தூரம் நடந்து சென்று, தாரநாத்தினிடம் மனுப் பத்திரம் பெற்றுக்கொண்டு, திங்களன்று காலையில் கல்கத்தா வந்து சேர்ந்துவிட்டார். அவருடைய இவ்வரிய முயற்சியையும் உழைப்பையுங் காணும்—கேட்கும் – எவர் மனந்தான் அன்பினால் பொங்கி வழியாது ! தாரநாத், ஈஸ்வரரின் கரை கடந்த அன்பு வெள்ளத்தில் மூழ்கிவிட்டார் என்பது மிகையாமோ ? தாரநாத்தின் ஏழைப் பெற்றோர்கள் ஈஸ்வர சந்திர வித்தியா சாகரரின் அருஞ்செயலைக் கண்டு உவகைப் பெருங் கடலுள் மூழ்கி, அவரை

மனமார, வாயார வாழ்த்திப் போற்றினர்; ஆசி கூறினர். ஈஸ்வரர், தம் நண்பர் ஒருவருக்குத் தாமளித்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டதை நினைந்து, 'ஒருவராலும் கரை செய்ய அரியதொரு பேருவகைக் கடலு'ள் ஆழ்ந்தார்.

## 4. சுயமதிப்பு வீரர்

ஈஸ்வர சந்திரருக்கு இளைய சகோதரர் ஒருவர் உண்டு. அவர் பெயர் ஜம்பு சந்திரர் என்பதாகும். அவர் பிர்சிங்காவில் இருந்து வந்தார். அவருக்குத் திருமணம் செய்து வைக்கவேண்டிய அவசியம் நேர்ந்தது. பிர்சிங்காவில் அத்திருமணத்திற்கான ஏற்பாடுகள் யாவும் நடைபெற்றன. தம்பியின் திருமணத்திற்கு அவசியம் வருமாறு தாயார் பகவதி தேவியாரிடமிருந்து ஈஸ்வரருக்கு ஒரு கடிதம் வந்தது. அதனால் அவர், பெரு முயற்சி செய்து விடுமுறை பெற்றுக்கொண்டு கல்கத்தாவிலிருந்து ஐம்பது மைல் தூரத்திலுள்ள பிர்சிங்கா கிராமத்திற்குக் கால் நடையாகவே புறப்பட்டார். அவர் புறப்பட்ட சமயம் மழைக் காலமாக இருந்தது. இடை வழியில் புயலும் காற்றும் மழையும் தொடர்ந்து வீசவே, அன்றிரவு அவர், வழியிலிருந்த ஒரு சத்திரத்தில் தங்கிவிட்டார்; விடிந்ததும், மீண்டும் நடக்கத் தொடங்கி, வழியிலுள்ள ஓர் ஆற்றங்கரையை அடைந்தார். அவ்வாற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்தது. அதனைக் கடந்து செல்ல ஒரு விதமான பாலமும் இல்லை; படகுகளோ எதிர்க் கரையில் இருந்தன; வெள்ளத்தின் வேகமோ படகுகளையும் நிலைக்க ஒட்டாமல் அடித்துக்கொண்டு போகத் தக்கதாக இருந்

தது. ஈஸ்வர சந்திரர் பார்த்தார் : அவ்வளவு தூரம் சென்ற அவர், திரும்பிக் கல்கத்தா செல்லலே விரும்ப வில்லே. தம்பியின் திருமணத்திற்குப் போகத்தான் வேண்டும் என்னும் அவா அவரைப் பிடர் பிடித்து உந்தியது. அவர், தம் அன்னேயின் கட்டளேயை மீறி நடக்க அணுத்துணேயும் விரும்பவில்லே. எனவே அவர், சிறிதும் தாமதியாமல்-பின்வாங்காமல்-அச்ச முறுமல் - ஆற்றிற் குதித்தார். அவர், வெள்ளத் தின் வேகத்தைப் பொருட்படுத்தவில்லே ; மோதி மோதி விழும் ஆற்று அலேகளினூடே ஒரே உறுதியுடன் மிகவும் கஷ்டப்பட்டு நீந்தி அக்கரை அடைந்தார். அவர், உணவு உட்கொண்டு நெடுநேர மாகிவிட்டதாலும் ஆற்றில் நீந்தி வந்த களேப்பினு லும் சோர்வும் பசியும் அவரை வருத்தத் தொடங் கின. மேலும் அவர் நடக்க வேண்டிய தூரமோ அதிகமாக இருந்தது. எனவே, அவர் விடா முயற்சி யுடன் அன்றெல்லாம் நடந்து, இரவு ஒன்பது மணிக் குத் தம் இல்லம் அடைந்தார்.

அன்று காலேயிலேயே ஈஸ்வரரின் தம்பியாகிய ஜம்பு சந்திரருக்குத் திருமணம் நடந்துவிட்டது. எனி னும், அவர் தாயார் பகவதி தேவியார் அன்றெல்லாம் நீரும் அருந்திலர் ; தம் குமாரர் ஈஸ்வரர் வரவில்லேயே என்ற ஏக்கம் அவரைப் பெரிதும் துன்புறச் செய் தது. அவர் கண்ணீர் வடித்த வண்ணமாகவே அன் றைப் பொழுதைக் கழித்தார் ; ஈஸ்வர சந்திரரை

இரவு ஒன்பது மணிக்குக் கண்டதும், அவரது துன்பக் கண்ணீர் இன்பக் கண்ணீராக மாறியது. இத்தகைய அன்னையார்மீது ஈஸ்வரர் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார் என்பதில் வியப்பென்னை? மகிழ்ச்சி அற்றிருந்த அந்தத் திருமண வீடு, மழை கண்ட பயிரே போன்று உவப்படைந்தது; அனைவரும் களிப்படைந்தனர். ஈஸ்வரரின் வரவு அக்கிராமத்தையே களிப்படையச் செய்துவிட்டது. அந்தத் திருமணச் சடங்குகள் யாவும் இனிதே முடிவெய்திய பின்னர் ஈஸ்வர சந்திரர், தம் பெற்றோர்களின் ஆசியுடன் மீண்டும் கல்கத்தா வந்தடைந்தார்.

அத்தருணத்தில், ஈஸ்வர சந்திரர் படித்துத் தேர்ந்த ஹிந்து வடமொழிக் கலாசாலையில் ஓர் உதவி அமைச்சர் (Assistant Secretary) வேலை காலியாயிற்று. அப்பதவியில், அவரையே நியமித்தல் வேண்டுமென்று அக்கலாசாலை நிர்வாகிகள் பெரிதும் முயன்றனர். எனவே, வித்தியா சாகரர் வில்லியம் கோட்டைக் கலாசாலையை விட்டு, ஹிந்து வடமொழிக் கலாசாலையில் உதவி அமைச்சர் பதவி ஏற்றார். வில்லியம் கோட்டைக் கலாசாலையில் காலி ஏற்பட்ட பதவியில் அவருடைய சகோதரருள் ஒருவரான தீனபந்து நியாய ரத்ன என்பவர் நியமிக்கப்பட்டார். இதனால், பெரும் பணக் கஷ்டத்திலிருந்த அவருடைய குடும்பம் ஒருவாறு சீரடையத் தொடங்கிற்று.

ஈஸ்வரர், தாம் பதவி ஏற்ற புதிய கலாசாலேயில் பல விஷயங்களேத் திருத்த வேண்டியவரானுர்: அக் கலாசாலே ஆசிரியர்கள் குறித்த நேரத்தில் கலா சாலேக்கு வந்திலர் ; பாட புத்தகங்களோ ஒழுங்கான வைகளாக வைக்கப்பட்டில ; மாணவர்களோ இடை யிடையே வருவதும் போவதுமாக இருந்தனர். வித் தியா சாகரர் இக்குறைகள் அனேத்தையும் சீர்திருத் தம் செய்து ஓர் ஒழுங்கை ஏற்படுத்தினுர்; அக்கலா சாலேயின் பயிற்சி முறையுடன் கணிதத்தையும் சேர்த்து வைத்தார் ; இடையிடையே வெளியே போக விரும்பின மாணவர்களுக்கு ஒழுங்கு முறை களேக் கற்பித்தார் ; 'வெளிச் சீட்டு' முறை ஒன்றை ஏற்படுத்திக் கலாசாலே நடந்துகொண்டிருக்கும் சம யங்களில் வெளிச் சீட்டு இல்லாமல் எவரும் வெளியே போக முடியாதபடி கட்டுப்படுத்தினுர் ; அன்றியும், அவ்வப்போது தேர்வுகள் நடத்தும் வழக்கத்தையும் புகுத்தினுர்.

ஹிந்து வடமொழிக் கலாசாலேயின் தலேவர் ஒரு நாள் வித்தியா சாகரரை அழைத்தனர். வித்தியா சாகரர், தலேவர் கட்டளேக்கிணங்க அவரிடம் சென்றபோது அத்தலேவர், மேஜையின்மீது காலேப் போட்டுக்கொண்டு, தம்மிடம் வந்த அவருக்கு ஆசனம் அளியாமல் பேசிக்கொண் டிருந்தார். தலேவர் இவ்வாறு தம்மை நடத்தி யதை வித்தியா சாகரர் அறவே வெறுத்தனர்; அவர்

மனம் மிகவும் வருந்தியது. எனவே அவர், தாம் அழைக்கப்பட்ட காரியத்தை விரைவாகக் கேட்டு விட்டு வெளிச் சென்றுவிட்டார். ஆயினும் அவர், அந்நிகழ்ச்சியினை மறந்துவிட்டிலர். ஒரு நாள் அத் தலைவர் வித்தியா சாகரரின் அறைக்கு வந்தார். அப் போது வித்தியா சாகரர் மேஜைமீது தம் காலை வைத்தவண்ணமே அத்தலைவர்க்கு ஆசனம் அளியா மல் பேசி அனுப்பிவிட்டார். இங்ஙனம் வித்தியா சாகரர் தம்மிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டதைப் பற்றி அத்தலைவர் தாங்கொணுக் கோபம் கொண்டார்; உடனே இவ்விஷயத்தைக் கல்விக் கழகத் தலைவர் டாக்டர் மோவட் அவர்களி டம் முறையிட்டார். வித்தியா சாகரரும் நடந்த விவ ரங்களை எல்லாம் விரிவாக டாக்டர் மோவட்டிடம் கூறினர். இருவர் முறையீட்டினையும் கேட்ட அவ் வதிகாரி, அவ்விருவரையும் சமாதானப்படுத்தி அனுப்பினர்.

இது நடந்து சிறிது காலம் கழிந்த பின், ஹிந்து வடமொழிக் கலாசாலையில் ஆசிரியர் பதவி ஒன்று காலியானது. அது, சிறிது அதிக வருவாயை உடையது. வித்தியா சாகரர் அப்பதவியை ஏற்பின், கலாசாலையை மேலும் செவ்வைப்படுத்த முடியாது. அக்கலாசாலையை முதற்றரமானதாக ஆக்கவேண்டும் என்னும் பெரு நோக்கம் கொண்ட வித்தியா சாக ரர் அந்த ஆசிரியர் பதவியை ஏற்காமல் அதனை,

'மதன் மோகன்' என்பவருக்கு அளித்துவிட்டார். அந்தச் சமயத்தில் அவருடைய இளைய சகோதரர்களுள் ஒருவர் காலராவினால் காலமானார். அவர் இறந்த சிறிது காலத்திற்குள், வித்தியா சாகரர் கூறிய சில சீர்திருத்தங்களை அக்கலாசாலை நிர்வாகிகள் எதிர்த்த காரணத்தினால், அவர் அக்கலா சாலையை விட்டு விலகிவிட்டார். அவர் தம் வேலையை இழந்த பிறகு பணக் குறைவினால் அடைந்த இன்னல்கள் பல. அவருடன் பிறந்தார் சம்பாதிக்கும் பணம் குடும்ப நிர்வாகத்திற்குப் போதியதாக இல்லை. ஆகவே, அவர் சிற்சில வேளைகளில் அங்கும் இங்குமாகக் கடன் வாங்க நேரிட்டது. இத்துணை இன்னல்கள் ஏற்பட்டும், பணக் குறை நேர்ந்தும், வேலையில்லாத அந்தக் காலத்தை அவர் வீணில் கழித்தனர் என்று எண்ணுகின்றீர்களா? அவர் ஆங்கிலத்தை, மேலும் கற்று அதில் மிகுந்த திறமை வாய்க்கப்பெற்றார்; டாக்டர் மோவட்டின் வேண்டுகோள் மீது சில மாதங்கள் வரை 'காப்டன் பாங்க்' என்பவருக்கு வங்காளி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளைப் பயிற்றுவித்தார். இவ்வண்ணம் வித்தியா சாகரர் தமக்குக் கல்வி கற்பித்ததற்காகக் 'காப்டன் பாங்க்' மாதச் சம்பளம் ஐம்பது ரூபாய் விகிதம் கணக்கிட்டுப் பணம் கொடுக்க வந்தனர். வித்தியா சாகரர் அத்தொகையைப் பெற மறுத்து விட்டார்; ஏனெனின், தம் நண்பராகிய டாக்டர் மோவட்டின்

வார்த்தைகளுக்குக் கௌரவம் அளிப்பதற்காகவே தாம் கற்பித்ததாகவும், வெறும் வருவாய் நோக்கம் கொண்டு கற்பிக்கவில்லை என்றும் காப்டன் பாங்குக்குத் தெளிவாகக் கூறிவிட்டனர். நட்பெனின் இது வன்றோ நட்பு! வித்தியா சாகரர், நட்புக்கு ஓர் அணி கலனாய்த் திகழ்ந்ததுடன், வறுமையிற் செம்மையான வாழ்வுக்கும் ஒரு மேற்கோளாய் விளங்கினர்.

அக்காலத்தில் வங்காளியில் மிகுதியாக நூல்கள் இல்லை; சிறந்த பாட புத்தகங்கள் இல்லை. வித்தியா சாகரர் இந்தக் குறையைப் பெரிதும் போக்கினார் என்றே கூறல் வேண்டும். 1847-ஆம் ஆண்டு வில்லியம் கோட்டைக் கலாசாலை மாணவர்களுடைய உபயோகத்திற்காக, வங்காளி மொழியில் பாட புத்தகமொன்று எழுதிக் கொடுக்குமாறு மார்ஷல் என்பார் வித்தியா சாகரரை வேண்டினர். அவர் அதற்கிணங்கி, விக்கிரமாதித்ய அரசனுக்கு வேதாளம் சொன்ன 'முறை தெரியாக் கதை'களை ஹிந்தி மொழியிலிருந்து வங்காளியில் மொழி பெயர்த்து வெளியிட்டார். ஆனால் அது பாட புத்தகமாக வைத்தற்கு உரியவாறு எழுதப்படவில்லை என்று எண்ணிய கல்வி இலாகா அதிகாரிகள், முதன் முதலில் அதனைப் பாட புத்தகமாக வைக்க மறுத்துவிட்டனர். பின்னர், ஸீரம்பூர் கிறித்தவப் பாதிரியாரான 'மார்ஷ்மன்' என்பவர் அந்நூலைப் படித்துப் பார்த்து 'அது நன்றாக இருக்கிறதெ'ன்று கூறவே,

அந்நூல் பாடபுத்தகமாக அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

இச்சமயத்தில் வித்தியா சாகரருக்கு ஒரு நல்ல யோசனை தோன்றியது. அது, தாமே சொந்தத்தில் ஓர் அச்சுக்கூடம் ஏற்படுத்தி, பல நூல்கள் எழுதி வெளியிட்டுப் பொருளீட்டுதல் என்பதே. அதற்காக அவர், விடா முயற்சியுடன் உழைத்து மதன் மோகன் என்பவருடன் கூட்டாகச் சேர்ந்து, 'சமஸ்கிருத அச்சுக்கூடம்' என்னும் பெயரால் ஓர் அச்சுத் தொழிற்சாலை நிறுவினர். ஆனால், சிறிது நாட்களுள் இந்தக் கூட்டு முறிந்தது. அதனால், வித்தியா சாகரரே அந்த அச்சுக்கூடத்தின் சொந்தக்காரரானார்.

வித்தியா சாகரர் ஒருமுறை பர்துவானுக்குச் சென்று சரித்திர சம்பந்தமான சில காட்சிகளைக் கண்டு வந்தார். இவர் வரவை அறிந்த மஹா ராஜா மஹ்தாப் சந்த் பஹதூர் வித்தியா சாகரருக்கு உணவை அனுப்பிவைத்தார். ஆனால், வித்தியா சாகரர் மரியாதையாக அதை மறுத்துத் திருப்பி அனுப்பி விட்டார். அதன்மீது மஹா ராஜா, வித்தியா சாகரரை நேரில் வரவழைத்து நெடுநேரம் அவருடன் அளவளாவிப் பேசி, இரண்டு சால்வைகளையும் 500 ரூபாய் கொண்ட பண முடிப்பையும் அவருக்குப் பரிசாக அளித்தார். வித்தியா சாகரர் அவற்றினையும் மறுத்து, இத்தகைய கருணையை ஏழைப் பண்டி

தர்களிடம் காட்ட வேண்டுமென்று மஹா ராஜாவுக்கு அறிவுறுத்தினர். அவர் இப்படி மறுத்தமைக்குக் காரணம், தாம் பெரும் பணக்காரர் என்பதன்று. உழைப்பின்றி வெறும் ஊதியம் பெறுவதை எப்போதும் அவர் வெறுத்தமையே இதற்குக் காரணமாகும். அஃதே போல வெறும் பரிசுகள் பெறுவதிலும் அவருக்கு விருப்பம் இருந்திலது. இதனுற்ருன் அவர், தம்மைவிட வறுமையுள் ஆழ்ந்து தவித்துக்கொண்டிருக்கும் ஏழைப் பண்டிதர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்றும் அப்படிச் செய்தலே தமக்குப் பெருந் திருப்தி அளிப்பதென்றும் மஹா ராஜாவுக்கு விளக்கிக் காட்டி, அவரளித்த பரிசுகளை நன்றியறிதலுடன் திருப்பிவிட்டார். இச்சுயநலத் தியாகத்தைக் கண்ட மஹா ராஜா அன்று முதல் வித்தியா சாகரரைத் தம்முயிர்த் தோழராகக் கொண்டார்.

மார்ஷ்மன் என்பார் ஆங்கிலத்தில் எழுதியிருந்த 'வங்காள சரித்திரம்' என்ற நூலை வித்தியா சாகரர் 1848-ஆம் ஆண்டு வங்காளியில் மொழி பெயர்த்து வெளியிட்டார். நவாப் சுராஜுத்தௌலா காலத்திலிருந்து லார்டு வில்லியம் பெண்டிங்க் காலம் வரை அச்சரித்திரம் எழுதப்பட்டிருந்தது. 1846-ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து வேலை இல்லாமல் இருந்த வித்தியா சாகரர், 1849-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் மீண்டும் எண்பது ரூபாய் மாதச் சம்பளத்

தில் வில்லியம் கோட்டைக் கலாசாலைத் தலைமைக் குமாஸ்தாவாகவும், பொருளாளராகவும் வேலையில் அமர்ந்தார் ; அவ்வாண்டு செப்டெம்பர் மாதம், சில ஐரோப்பியக் கலா வல்லுநர்களின் வாழ்க்கைச் சரிதங்களை வங்காளியில் மொழி பெயர்த்து வெளியிட்டார்.

1848-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தமது இருபத்தெட்டாம் வயதில் வித்தியா சாகரருக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. அதற்குமுன் அவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்திருந்தது ; அவ்வாண் குழந்தைக்குப் பிறகு மற்றும் மூன்று பெண்மக்கள் உண்டாயினர்.

## 5. பெண் கல்வி

வித்தியா சாகரர் வாழ்ந்த காலத்தில் இந்தியப் பெண் கல்விக்குப் பொது மக்களிடமிருந்து போதிய ஆதரவு கிடைத்திலது. பெண்கள் படிப்பது தீமைக்கே என்றும், பெண்கல்வியினால் பெண்கள் கற்பு நிலை குலையும் என்றும் பெண் தன்மை கெடுமென்றும், அச்சம் மடம் நாணம் பயிர்ப்பென்னும் நால் வகைக் குணங்களும் நசித்துவிடுமென்றும் குடும்ப நிர்வாகத்திற்கான பெண்கள், கல்வி பெறுதல் கூடாதென்றும் நம்நாட்டு மக்கள் கருதியிருந்தனர். இதற்குக் காரணம் மக்கள் போதிய கல்வியறிவு உடையவர்களாக இராதிருந்தமையே ஆகும். மேலும், நம் நாட்டுப் பழங்காலக் கலைகளையும் நாகரிகத்தையும் இடைக்கால மக்கள் மறந்தொழிந்தனர் அல்லரோ? ஆனால், வித்தியா சாகரர் அங்ஙனம் மறந்தவரல்லர். அவர், வேத-ஆகம-புராண-இதிகாசங்களையும் நியாய நூல்களையும் நன்றாகப் படித்தறிந்தவர் ஆதலின், பெண்கல்வியின் அவசியத்தை நன்கு உணர்ந்திருந்தார். எனவே அவர், பெண்கல்வியின் அவசியத்தை மக்கள் உணருமாறு செய்யப் பெரும் பாடுபட்டார். அவர், பெண்களுக்குக் கல்வியறிவு இருந்தால்தான் சமூகம் வளர்ச்சி அடையும் என்றும், நம்நாடு முன்னேறும் என்றும், அவர்களுக்குப் பிறக்கும் மக்க

ளாகிய எதிர்கால இந்திய மக்கள் கல்வியறிவு உடையவர்களாக இருத்தல் கூடுமென்றும் நாடோறும் பிரசாரம் செய்துவந்தார்.

கல்வி இலாகாவின் தலைவரும் சட்டசபை அங்கத்தினருமான கனம் ஜே. ஈ. டிரிங்க்வாட்டர் பேதூன் என்பவர் கல்கத்தாவில் ஒருபெண் கல்லூரியைத் திறந்து வைத்து, வித்தியா சாகரரை அதன் கௌரவக் காரிய நிர்வாகியாக நியமித்தார். வித்தியா சாகரர் அவ்வேலையை இருபது ஆண்டுகள்வரை மிகத் திறமையுடனும் ஊக்கத்துடனும் பார்த்து வந்தார். அதே சமயத்தில் கிறிஸ்தவ மதப் பிரசாரகர்களால் ஐம்பது பெண் கலாசாலைகள் கல்கத்தாவில் நிறுவப்பட்டு நடைபெற்று வந்தன. அவற்றில் மேனாட்டுக் கல்வி கற்ற பெண்கள் சிலர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக்கொள்ளவே, வங்காளிகள் அக்கல்லூரிகளின்மீது ஆத்திரங்கொண்டனர். இவ்வாத்திரத்தைத் தணித்து வங்காள மக்களின் ஆர்வத்தைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடனேயே 1849-ஆம் ஆண்டில் ஹிந்துப்பெண்கள் கலாசாலை ஒன்றைப் 'பெதூன்' ஆரம்பித்து வைத்தார். பின்னர் அவரது நினைவை முன்னிட்டு அப்பள்ளிக்கூடம் 'பேதூன் கலாசாலை' என்ற பெயருடன் விளங்கலாயிற்று. சிறிது காலங் கழித்து அஃது உயர்தரக் கலாசாலையாகவும் வளர்ந்தது. அந்தக் கலாசாலையில் ஆறு வயதிலிருந்து பதினெட்டு

வயதுக்கு உட்பட்ட ஹிந்துப் பெண்களே படித்து வந்தனர். அதனால் அக்கலாசாலை மஹா ஜனங்களின் பேராதரவினைப் பெற்று விளங்கியது.

ஹிந்து வடமொழிக் கலாசாலையில் 'தலைவர்' (Principal) பதவி ஒன்று புதிதாக ஏற்படுத்தப் பட்டது. அந்தப் பதவிக்கு முதல் தலைவராக வித்தியா சாகரரே நியமிக்கப்பட்டார். அவர் ஹிந்து வடமொழிக் கலாசாலைத் தலைவராக வந்தவுடன், அக்கலாசாலையின் நிலைமையைப்பற்றி விரிவான புள்ளி விவரங்கள் அளிக்க வேண்டுமென்று கல்வி இலாகா அதிகாரிகள் விரும்பினர். வித்தியா சாகரர் உடனே சரியான அறிக்கை ஒன்றை ஆங்கிலத்தில் தயாரித்துக் கல்வி இலாகா அதிகாரிகள்பால் சமர்ப்பித்தார். அதனைக் கண்டு அவர்கள் திருப்தி கொண்டதுடன் வித்தியா சாகரர்மீது பெரு மதிப்பும் கொண்டனர்.

வித்தியா சாகரர் தலைவராக இருந்த காலத்தில் ஹிந்து வடமொழிக் கலாசாலை பல துறைகளில் முன்னேற்றம் அடைந்தது. மாணவர்களுக்குக் கடுந் தண்டனை அளிப்பது அவருக்கு எப்போதும் வெறுப்பை அளித்தது. ஆதலின் அவர் அதனை அடியோடு நீக்கினார். மானிடப் பிறவியில் உயர்வு தாழ்வு பாராட்டப்படுவது அறியாமையே என் பதை நன்கறிந்திருந்த அவர், தம் கலாசாலையில் அதுகாறும் சேர்க்கப்படாதிருந்த 'காயஸ்த வகுப்பு'ப்

பிள்ளைகளையும் சேர்த்துக்கொண்டு கல்வியளித்தார். காயஸ்த வகுப்பு மக்கள் வங்காளிகளால் தீண்டப் படாத மக்களைப்போன்று நடத்தப்பட்டுவந்தார்கள். எனவே, அந்தச் சமூக மக்களை அதுவரை எந்தக் கல்லூரியும் கலாசாலையும் சேர்த்துக் கல்வி கற்பித் ததே இல்லை. அந்தச் செயல் வித்தியா சாகரர் மனத் தில் பெருங் கிளர்ச்சியை உண்டுபண்ணியது. இறை வன் படைத்த மக்களுள் பிறப்பால் உயர்ந்தவர்-தாழ்ந்தவர் இல்லை என்பதை அவர் உறுதியாக நம்பி னார். காயஸ்தன் மூளையும் இரத்தமும் வேறாக இல்லை என்பதையும் காயஸ்தர்களும் இதர மக்களை போலக் கல்வி பெற உரிமை உடையவர்களே என் பதையும் அப்பெரியார் எண்ணினார். ஆகவே, அவர் காலத்தில் காயஸ்த வகுப்புப் பிள்ளைகளும் கலாசாலை யில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இது வித்தியா சாகரர் செய்துவைத்த பெரிய சீர்திருத்தமாகும்.

வித்தியா சாகரர், பழைய ஏட்டுப் பிரதிகளை எல்லாம் சீர்திருத்தியும் அச்சிட்டும் கலாசாலையின் பொருளாதார நிலையை ஒழுங்காக்கியும் பல பெரிய மாறுதல்களைச் செய்து, அந்த ஹிந்து வடமொழிக் கலாசாலையை உயர் நிலைக்குக் கொணர்ந்தார். 1851-ஆம் ஆண்டு இறுதிக்குள் கலாசாலைக்கான நூல்கள் பல அவரால் எழுதி வெளியிடப்பட்டன. அவர் மெல்ல ஆங்கிலத்தை அந்தக் கலாசாலையில் கட் டாய பாடமாக ஆக்கிவிட்டார்; 1853-ஆம் வருடம்

பிர்சிங்கா - கிராமத்தில் ஏழை விவசாய மக்களின் குழந்தைகளுக்காக ஓர் இலவச இராப் பள்ளிக் கூடத்தையும், ஓர் இலவசப் பகற் பள்ளிக்கூடத்தை யும் ஏற்படுத்தினர். வித்தியா சாகரர் இவற்றிற்காகத் தம் கைவிட்டுச் செலவு செய்யவேண்டியவரானர். அந்தச் சமயத்தில் அவரது மாதச்சம்பளம் முந்நூறு ரூபாய். இது மட்டுமின்றி அவர் எழுதி வெளியிட்டிருந்த நூல்கள் மூலம் மாதாமாதம் ஐந்நூறு ரூபாய் வருமானம் கிடைத்துக்கொண்டிருந்தது.

வங்காள அரசாங்கம் வங்காள மெங்கும் சில ஆங்கில-தாய் மொழிப் பள்ளிக்கூடங்களைத் திறந்து வைத்து வேலை செய்யத் திட்டம் ஒன்றைத் தயாரித்துக் கொடுக்கும்படி 1854-ஆம் ஆண்டில் வித்தியா சாகரரை வேண்டியது. வித்தியா சாகரர் சிறந்த தொரு திட்டம் வகுத்து அரசாங்கத்தினிடம் சமர்ப்பித்தார். வங்க அரசாங்கம் அவர் சமர்ப்பித்த திட்டத்தை மிகவும் உயர்வாக மதித்து, அவரைப் பள்ளிக்கூடக் கண்காணிப்பாளராக (Inspector of Schools) நியமித்தது. அவ்வேலையினை ஏற்ற வித்தியா சாகரர் பல ஊர்களில் பல பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினர். இறுதியில் அவர் 1856-ம் ஆண்டில் கல்கத்தாவில் நிறுவப்பட்ட ஆசிரியர்கள் பயிற்சிக் கூடத்தின் அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

வித்தியா சாகரர் இத்துணைச் செல்வாக்கும் அதிகாரமும் புகழும் பெருமையும் பெற்றிருந்தும்

ஆடம்பர மற்றவராகவே இருந்துவந்தார் ; எப்பொழுதும் எளிய உடைகளையே அணிந்துவந்தார். அவர் பெரும்பாலும் கால் நடையாகவே யாண்டும் சென்று வந்தார் ; பள்ளிக்கூடக் கண்காணிப்பாளராயிருந்து பிற ஜில்லாக்களின் பள்ளிக்கூடங்களை மேற்பார்க்கச் சென்ற போதெல்லாம் மிகச் சாதாரண உடையிலேயே பல்லக்கில் ஏறிக்கொண்டு சென்றுவந்தார். ஏழைகளையும் துன்பப்பட்டவர்களையும் வறுமையால் வாடினவர்களையும் கண்ட போதெல்லாம் அவர்மனம் தீயிடைப்பட்ட மெழுகுபோல உருகினது. அவர் மனம் கருணையால்—அன்பால்—இரக்கத்தால் ஆக்கப்பெற்றதாகும். அவர் தமக்குக் கிடைத்த ஊதியத்திலிருந்து நாடோறும் நூறு ஏழை மக்களுக்கு அன்னம் படைத்து வந்தார். அவருடைய கிராமத்தில் பசியால் வாடியவர் எவருமில்லை. கல்விக் கடலான அவர்-இத்துணைக் கருணைக் கடலாய், ஏழைகளுக்கு இரங்குபவராய், பிறர் துயரம் காணச் சகியாதவராய் விளங்கின போதினும், உத்தியோக விஷயங்களிலும் கடமை ஆற்றுவதிலும் மிகவும் கண்டிப்பான குணமுடையவராகவே இருந்துவந்தார். அவர் மாணவர்களைப் பயத்தால் அடக்கி ஆள்வதை அறவே வெறுத்தார். அவர் அன்பு ஒன்றைக் கொண்டே மாணவர்களையும் மற்றையோரையும் பிணித்துவிடுதல் வேண்டுமென்றும் அதுதான் சிறந்த முறையாகுமென்றும் பன்முறை கூறியுள்

ளார். எனினும் அவர், குற்றமிழைக்கும் மனப் பான்மை கொண்ட மாணவர்களைத் தண்டித்துத் திருத்துவதை விரும்பினர். அதற்காக அவரளிக்கும் தண்டனைகள் மாணவர்களைச் சீர்திருத்துபவைகளாக இருந்தனவேயன்றி எவருக்கும் துன்பத்தையோ மன வெறுப்பையோ உண்டாக்குமாறு இருந்தில.

## 6. விதவை மறுமணச் சட்டம்

வித்தியா சாகரர் செயற்கரிய வேலைகளை எல்லாம் செய்து முடித்தார். அந்தப் பழைய காலத்தில் விதவைகள் உயிருடன் எரிக்கப்பட்டு வந்தனர். விதவைகள் பலர் இவ்வண்ணம் இறந்த கணவனின் சவத்துடன் எரிய மன விருப்பமின்றி இருந்தும் உறவினரால், சூழ உறைபவர்களால் வற்புறுத்தப்பட்டு எரிக்கப்பட்டுவந்தனர். ஆனால் விதவைகள் சிலர் மனமாரத் தங்கள் கணவர்களின் சவங்களுடன் உடன்கட்டை ஏறி உயிர் துறந்தனர். ஸ்ரீ ராஜா ராம்மோகன் ராய் அவர்களுடைய அரும் பெரும் முயற்சியால் 1829-ஆம் ஆண்டில் இவ்வழக்கம் சட்டத்தின் மூலம் ஒழிக்கப்பட்டது. அதன் பின் கணவனை இழந்த பெண்கள் சந்நியாசினிகளாக இறுதிக்காலம் வரை இறை வழிபாட்டில் வாழ்க்கை நடாத்திவந்தனர். இத்தகைய வாழ்க்கையில் இளவிதவைப் பெண்கள் பலர் பட்ட பெருந் துயரமானது வித்தியா சாகரரின் இளகிய மனத்தை உருக்கி விட்டதென்றே கூறவேண்டும். எனவே, அவர் எவ்வாறேனும் அந்த இள விதவைகளின் துயரத்தைப் போக்கத் தம்மாலான முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று உறுதி செய்துகொண்டார்.

வித்தியா சாகரருக்கு இளவயதிலேயே இந்த எண்ணம் மனத்தில் உதிக்கத் தக்கதொரு நிகழ்ச்சி

நடைபெற்றது: அவர் பதின்மூன்று வயது இளை ஞரா யிருந்தபோது, அவருடைய விளையாட்டுத் தோழியான பெண் ஒருத்தி சிறுபோதிலேயே கண வனை இழந்து பெருந் துன்புற்றமையைக் கண்டார்; பரிதாப நிலையில் இருந்த விதவைகளின் துயரைப் போக்க வேலை செய்ய வேண்டுமென்று அன்று முதல் உறுதி செய்துகொண்டார். அவ்வுறுதியை மேலும் மறக்கவொட்டாமல் ஞாபகப் படுத்துவது போல, அவருடைய வயது சென்ற ஆசிரியர் ஒருவர் இளம் பெண்ணொருத்தியைத் திருமணம் புரிந்து கொண்டு இளவயதிலேயே அவளை விதவைத் துயர் அனுபவிக்கச் செய்து இறந்த நிகழ்ச்சியும் சேர்ந் தது. கைம்பெண்களின் கஷ்டங்களைப் போக்க வேண்டுமென்னும் கருத்து வித்தியா சாகரர் மனத் தில் உதித்தமைக்கு மற்றொரு காரணமும் உண்டு. இள விதவைகளின் துயரம் போக்கவும் அவர்களுக்கு மறு மணம் செய்துகொள்ள அனுமதி அளிக்கவும் சாத்தி ரங்களில் ஏதாவது இடமிருக்கிறதா என்று ஆராய்ந்து பார்க்குமாறு அவரது அன்னையார் கட்டளையிட் டிருந்தனர். மைந்தரும் அன்னையாரது கட்டளையைச் சிரமேற்கொண்டு, விதவைகளின் துயர் போக்குவ தில் முனைந்து முன் நின்றார்.

இவ்வண்ணம் இளங் கைம்பெண்களின் துயரம் கண்டு பொறாமல் மறுமண முயற்சியில் ஈடுபட்ட முதல் மனிதர் வித்தியா சாகரர்தாம் என்று கூறி

விடல் முடியாது. அவர் செய்த கிளர்ச்சிக்கு முந்நூறு, நானூறு ஆண்டுகளுக்கு முன் 'இரகுநந்தனன்' என்னும் வங்காளி ஒருவர், தம் விதவை மகளை மறுமணம் செய்துகொடுக்க முயன்று தவறிவிட்டார். ஒரு நூற்றாண்டு கழிந்த பின், 'டக்கா' ஜில்லாவைச் சேர்ந்த விக்ரம்பூரில் இருந்த இராஜா ராஜ வல்லபர் தம்முடைய விதவை மகளுக்கு மறுமணம் புரிய ஏதேனும் சாத்திரப்படி வழி இருக்கிறதாவென 'நாடியா—பண்டிதர்களை' அணுகினார். அவர்கள் பலமாய் மறுத்துவிடவே, அவரால் தம் குமாரிக்கு மறுமணம் புரிய முடியவில்லை. இதே போன்று பலர் அக்காலத்தில் தனித் தனியே தத்தம் இல்லத்தில் விதவைப் பெண்களுக்கு மறுமணம் புரிய முயன்றும் முடியாதவர் ஆயினர். வித்தியா சாகரர் காலத்தவர்களான கல்கத்தாவின் தனவந்தர் பாபு மோதிலால் ஸீலும், 'கோட்டா' சமஸ்தானத் தலைவரும், ஷியாம் சரண் தாஸ் என்னும் செல்வரும் இந்தப் பழைய வழக்கத்தை முறித்து, விதவை மறுமண வழக்கத்தை ஏற்படுத்த முயன்று பயனற்றுவிட்டனர். இத்துணைப் பிரமுகர்கள் இம்மறுமணப் பிரச்னையில் தோல்வியுற்றிருந்தும், வித்தியா சாகரர் ஊக்கத்தைக் கைவிடாமல் பூரண மனத் துணிவுடன் விதவைகளின் மறு மணத்திற்குரிய சாத்திர ஆதாரங்களைப் பரிசீலனை செய்துகொண்டிருந்தார்.

ஒரு நாள் இரவு வித்தியா சாகரர் பராசர ஸ்மிருதி *யில் விதவைகளுக்கு மறுமணம் செய்ய அனுமதி இருப்பதாகக் கண்டுபிடித்து மகிழ்ச்சி அடைந்தார்; எனவே, அன்றிரவு முழுதும் விழித்துக் கொண்டிருந்து, தாம் கண்ட பராசர ஸ்மிருதியை ஆதாரமாக எடுத்துக் காட்டி, விதவை மணத்தை ஆதரித்துத் துண்டுப் பிரசுரம் ஒன்று எழுதினர்; பின், தம் அன்னையாரின் கட்டளைப்படி அந்தத் துண்டுப் பிரசுரத்தை ஏராளமாக அச்சிட்டு வழங்கினர். அதனல், அந்நகரம் முழுவதும் பெருங் கிளர்ச்சி எழுந்தது. வைதிகப் பெரியார்கள் அந்தத் துண்டுப் பிரசுரத்தின் கருத்தை எதிர்த்தனர். வித்தியா சாகரர் அவர்தம் எதிர்ப்புக்கு அஞ்சிலர்; அவர் வைதிகர்களுடன் நேரில் வாதம் செய்ய விரும்பினர்; அனைவரையும் 'இராஜா ராத காந்த தேவ் பகதூர்' அரண்மனைக்கு வரவழைத்தார். பெரிய வைதிகர் கூட்டம் ஒன்று அங்கு வந்தது. வித்தியா சாகரர் பராசர ஸ்மிருதி மேற்கோளை எடுத்துக் காட்டி அவ்வைதிகர்களுடன் வாதப்போர் இட்டார். அவரை வாதப்போரில் வெல்ல முடியா

---

*"கணவன் காணமற் போய்விடினும், இறந்து போய்விடினும், துறவியாய்ப் போய்விடினும், ஆண்மை இழந்து விடினும், ஈன சாதியினனுகிவிடினும், அவன் மனைவி மற்றொரு கணவனை வரித்துக் கொள்ளலாம்."

(பராசர ஸ்மிருதி, அத்தி 4.)

மல் பின்வாங்கிய வைதிகர்கள் முணுமுணுத்துக் கொண்டே புறமுதுகிட்டனர். வித்தியா சாகரரின் வல்லமையையும் திறமையையும் தைரியத்தையும் கண்ட இராஜா ராத காந்தர் அவருக்கு அவ்வைதிகப் பண்டிதர்கள் முன்னிலையில் இரண்டு போர்வைகளைப் பரிசளித்தார். வைதிகர்களுக்கு இச்செயல் வயிற்றெரிச்சலைக் கிளப்பிவிட்டது. அவர்கள் ஆத்திரம் மிகுந்தவர்களாய் இராஜா ராத காந்தரைப் பல கேள்விகள் கேட்டுத் துன்புறுத்தினர். அவர், வித்தியா சாகரரின் வாதத் திறமையை மெச்சித் தாம் போர்வைகள் பரிசளித்ததாகக் கூறினர்.

வைதிகர்கள் இராஜா ராத காந்தர் மாளிகையில் மற்றொரு கூட்டம் கூட்டினர். இம்முறையும் வித்தியா சாகரரின் வாதத்தின் முன் ஒருவரும் எதிர்த்து நிற்க முடியாதவர் ஆயினர். ஆனால், கூட்டத் தலைவரான வைதிகப் பண்டித சிரோமணி ஒருவர் மட்டும் இராத காந்தரிடமிருந்து இம்முறை இரு போர்வைகளைப் பரிசாகப் பெற்றார். எனவே, அக்கூட்டம் போர்வை பெறுவதற்காகக் கூட்டப் பட்ட கூட்டமே போலக் காணப்பட்டதே அன்றி, விதவை மறு மணத்தைப்பற்றி அக்கூட்டத்தால் எந்த வித முடிவும் ஏற்படவில்லை. அதனால், வைதிகரிடமிருந்து எத்தகைய உதவியும் கிடைக்காதென்பது வித்தியா சாகரருக்கு நன்கு விளங்கிவிட்டது. மேலும் அவரது விதவை மறுமணக் கொள்கைக்கு எதிரான கிளர்ச்சி

வங்காளமெங்கும் பலமாகத் தோன்றிவிட்டது. உடனுக்குடன் எதிர்ப்புத் துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டன. பல்வேறு இடங்களில் சாஸ்திரிகள் ஒன்று கூடி மறுமணக் கண்டனக் கூட்டங்கள் கூட்டி, வித்தியா சாகரரின் கொள்கையைக் கண்டித்தனர்.

இத்துணை வன்மையான எதிர்ப்பினிடையே, மறுமணக் கொள்கையை ஆதரித்த வித்தியா சாகரரும் அவரைச் சேர்ந்தவரும் கைகட்டி வாய்பொத்தி மௌனிகளா யிருந்துவிடாமல், பலவிதமான துண்டு வெளியீடுகளை வெளியிட்டுக்கொண்டு வந்தனர். வித்தியா சாகரர் தம் கையொப்பமிட்டே அழகிய எளிய நடையில் மறுமணத்தை ஆதரித்துப் பலவிதமான துண்டு வெளியீடுகள் வெளியிட்டு வந்தார். அவர் பராசர ஸ்மிருதியைத் தவருக உரைப்படுத்துவதாக வைதிக சாஸ்திரிகள் பழி தூற்றினர். அவரோ அவ்வைதிகர்களுக்கு ஸ்மிருதியின் கருத்தே புரியவில்லை என்று கூறினர். இந்த விவாதத்தில் ஏழை - பணக்காரர், குமரர் - கிழவர், கற்றோர் - மற்றோர் ஆகிய அனைவருமே கலந்து கொண்டனர். அக்காலப் பத்திரிகைகள் எல்லாம் இதைப் பற்றிப் பற்பலவாறு எழுதி வந்தன. ஆயினும், ஏழை மக்களிடையே - விதவைக்கன்னிகைகளினிடையே - வருந்தும் பெற்றோரினிடையே - வித்தியா சாகரரின் பெயரும் முயற்சியும்

தியாகமும் போற்றப்பட்டன. வித்தியா சாகரர்மீது பாராட்டுரைகள் யாக்கப்பட்டுத் தெருத்தெருவாய்ப் பாடப்பட்டன.

விதவை மறுமண விஷயத்தில் நம் நாட்டு மக்களை ஒன்றுபட்ட கருத்தினராகச் செய்வது எவ்வாற்றானும் முடியாத காரியமெனக் கண்ட வித்தியா சாகரர், விதவை மறுமணத்தின் அவசியத்தை வற்புறுத்தி, ஆங்கிலத்தில் துண்டு வெளியீடுகள் எழுதி வெளியிட்டார்; அவற்றை அரசாங்கத்துப் பெரிய ஊழியர்களான ஐரோப்பியர்களிடையே வழங்கினார்; அவ்வரசாங்க ஊழியர்கள் கூறிய யோசனைப் படி 1855-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நான்காம் நாளன்று தமது கையொப்பமிட்டு விதவை மறுமணத்தின் அவசியத்தை விளக்கி விண்ணப்பம் ஒன்றை அரசாங்கத்தார்க்கு அனுப்பினார். அவ்விண்ணப்பத்தில் பர்துவான் மஹா ராஜா, நாடியா மஹா ராஜா போன்ற பிரபலஸ்தர்கள் ஆயிரம் பேர் கைச் சாத்திட்டிருந்தனர். அதே ஆண்டு, நவம்பர் மாதம் 17-ஆம் தேதி தோழர் ஜே. பி. கிராண்ட் என்பவரால் விதவை மறு மணத்தைப் பற்றிய யோசனை ஒன்று 'இம்பீரியல் சட்டசபை'யில் கொண்டுவரப்பட்டது. அவ்வமயம் ஹிந்து விதவைகளின் துயரங்களும் கஷ்டங்களும், அவர்கள் அடைந்து வந்த அவமானங்களும், அவமானம் தாளாமற் சிலர் புரிந்து கொண்ட தற்கொலைகளும் விவரமாக எடுத்துரைக்கப்பட்டன.

இறுதியில் 1856-ஆம் ஆண்டு ஜுலை மாதம் 26-ஆந் தேதி இவ் விதவை மறுமண யோசனை அரசப் பிரதிநிதியின் சம்மதம் பெற்றுச் சட்டமாக மாறியது.

வித்தியா சாகரர் தமது முயற்சியில் ஒருவாறு வெற்றி பெற்று அரசாங்கத்தின் ஆதரவை மட்டும் பெற்றுக்கொண்டார். ஆனால், வைதிகப் பித்தம் தலைக்கேறிய சிலரோ அவரைக் கண்ட இடங்களி லெல்லாம் சபித்தனர்; வைதனர்; உயிருக்கே உலை வைக்கவும் துணிந்தனர். அரசாங்கத்துக்கு அனுப்பிய விண்ணப்பத்தில் வித்தியா சாகர ருடன் கையொப்பமிட்ட ஆயிரம் பேருள் பலர் புது மைக்காகவும் வேடிக்கைக்காகவுமே கையெழுத் திட்டனரே அன்றி, அதன் பலன் அறிந்தவர்கள் அல் லர். விதவைகள் மறுமணம் செய்துகொள்ளலாம் என்பது சட்டமாக்கப்பட்டவுடனே விண்ணப்பத் தில் கையெழுத்திட்டவர்களுள் பலர், வித்தியா சாக ரரைப் பரிகசிக்கத் தொடங்கினர்; அவர்களே விதவை மறுமணங்கள் நடைபெறுவதற்கு எதிரிக ளாகவும் நின்றனர். வித்தியா சாகரருக்குப் பல இடங்களிலிருந்து அச்சுறுத்திய முறையில் வரையப் பட்ட கடிதங்கள் பல வந்துகொண்டிருந்தன. வங் காள மக்கள் பலர் அவரைக் கொன்று விடவும் முயன்றனர். ஆனால், அச்சம் என்பதைச் சிறிதும் அறியாத வித்தியா சாகரர் அவற்றை யெல்லாம் பொருட்படுத்தினர் இல்லை; அரசாங்கத்துக்கும்

இந்த மிரட்டல்களைப் பற்றியோ அச்சுறுத்தலைப் பற்றியோ ஒன்றும் அறிவித்திலர்; ஆனால், பொது மக்களின் ஆதரவைத் தாம் பூரணமாகப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்னும் கருத்துடன் அல்லும் பகலும் இடையீடின்றிப் பேரூக்கத்துடன் உழைத்து வந்தார்.

வித்தியா சாகரரின் இடையறு உழைப்பின் பயனாக 1856-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கல்கத்தாவில் முதல் விதவைத் திருமணம் நடந்தேறியது. இந்நிகழ்ச்சி வித்தியா சாகரரை இன்பக்கடலுள் ஆழ்த்தி விட்டது. அந்த விதவை மறு மணத்தின்போது, ஏதேனும் கலகம் நடக்குமோ என்னும் பீதியால் மணம் நடைபெற்றுக்கொண்டிருந்த தெருவில் போலீஸார் காவல் புரிந்தனர். வித்தியா சாகரர் அத்திருமணத்திற்குச் சென்றிருந்தார். ஆனால் விதவை மறுமணத்தை ஆதரித்தவர் பலரும் அத்திருமணத்திற்குப் பண உதவி செய்தவரும் வைதிகர்களின் கோபத்துக்கு அஞ்சித் திருமணத்திற்கு வந்திலர்.

## 7. கல்வி இலாகா அதிகாரி

**வ**ங்காளத்தில் சமூக நிலைமை இவ்வாருக, வங்க அரசாங்கத்தில் அவ்வமயம் ஒரு பெரும் மாறுதல் நிகழ்ந்தது. வித்தியா சாகரரின் நண்பரான டாக்டர் மோவட் இங்கிலாந்து சென்றுவிட்டார். அப்போது வங்காளத்தின் கவர்னராக இருந்த எப். ஜே. ஹல் லிடே என்பவர் கல்வி இலாகாவை அடியுடன் திருத்தி அமைத்தார்; அதுவரை 'கல்விச் சபை' (Education Council) என்ற பெயருடன் தனி யாக இருந்துவந்த இலாகாவை எடுத்துவிட்டார். அதற்குப் பதிலாகப் 'பொது விளம்பர இலாகா' (Department of Public Instruction) ஒன்று நிறுவப்பட வேண்டுமென்று விரும்பப்பட்டது. இறுதியில் 1855-ஆம் ஆண்டு கார்டன் எங் என்ற ஐ. ஸி. எஸ். படித்த ஒரிளைஞர் கல்வி இலாகாத் தலைவராய் நியமிக்கப்பட்டார்; அவரிடமே அவ்வி லாகா முழுவதும் ஒப்படைக்கப்பட்டது. வங் காளக் கவர்னர், அந்தப் புதிய கல்வி இலாகாத் தலை வர்க்கு அத்துறையில் பயிற்சி அளிக்குமாறு வித்தியா சாகரரை வேண்டினர். கவர்னர் தம் அருமை நண்பரா யிருந்தமையின், வித்தியா சாகரர் அவர் விருப்பத்தை நிறைவேற்றலானார்.

வித்தியா சாகரர் எப்போதும் எளிய உடையில் காணப்பட்டார். அரையில் ஆடையும் உடலில் சட்டையும் சட்டைமீது துண்டொன்றுமே அவர் அணிதல் வழக்கம்; இக்கோலத்துடன், காலில் செருப்பை அணிந்துகொண்டு சென்று கவர்னரைக்கண்டு பேசுவார்; இவ்வண்ணமே தம் வேலைகள் அனைத்தையும் கவனித்து வந்தார்; ஒரு முறை கவர்னரே தம்மிடம் கூறியபின் சிறிது காலம் உத்தியோக உடைகள் உடுத்திச் சென்றார். ஆனால், அவருக்கு அவ்வுடைகள் வெறுப்பை அளித்தமையால், மீண்டும் பழைய ஆடையிலேயே கவர்னரைப் போய்க் கண்டு, தம்மால் நூதன உடைகளை உடுத்திக்கொள்ள இயலாதென்று கூறிவிட்டார். கவர்னரும் அவருடைய மனத் தூய்மையையும் உள்ளத்து உறுதியையும் கண்டு வியந்து, அவருக்கு விருப்பமான உடையில் தம்மை வந்து காணலாம் என்று தெரிவித்தார்.

ஒரு சமயம் வித்தியா சாகரர் கல்கத்தாவிலிருந்து பர்துவானுக்குப் புகை வண்டியிற் சென்றுகொண்டிருந்தார். வழக்கம் போல் அவர் மிகவும் எளிய உடை உடுத்திக்கொண்டிருந்தார். அவர் எப்போதும் மூன்றாம் வகுப்பிற்றான் பிரயாணம் செய்தல் வழக்கம். அன்றும் அஃதே போல அவர் பிரயாணம் செய்துகொண்டிருக்கையில் மேனாட்டு உடையில் காணப்பட்ட இந்திய இளைஞன் ஒருவன் அவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தான். அவனும் பர்துவான்

சென்றுகொண்டிருந்தான். புகைவண்டி பர்துவான் போய் நின்றவுடன் அவ்வாலிபன் வண்டியை விட்டு இறங்கினான்; தன் சிறு கைப்பெட்டியைத் தூக்கிச் செல்வது அவனுக்கு அநாகரிகமாய்த் தோன்றியது. எனவே, அவன் அச்சிறு கைப்பெட்டியைத் தூக்கிச் செல்லக் கூலியாள் ஒருவனைத் தேடினான். ஒருவனும் கிடைத்திலன். அவ்விளைஞனுக்கு ஆத்திரம் பொங்கியது; நிலைய அதிகாரியிடம் சென்று தனக்கொரு கூலிக்காரனைப் பிடித்துத் தரும்படி வாதிட்டான். இவற்றை எல்லாம் வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருந்த வித்தியா சாகரர் அவ்விளைஞனிடம் சென்று, "இங்கே கூலியாள் காணப்படவில்லை. பெட்டியைக் கொடுங்கள்; நான் தூக்கிக் கொண்டு வருகிறேன்!" என்று கூறினார். அவர் இன்னவர் என்பதை அறியாத அவ்விளைஞன், எவரோ ஒரு கிராம வாசி கூலிக்கு ஆசைப்பட்டு வந்திருப்பதாக எண்ணிக்கொண்டு கர்வத்துடன் அந்தச் சிறு கைப்பெட்டியை காட்டித் தூக்கி வரும்படி கட்டளையிட்டு, அவர் பின் தொடரத் தன் வீடு போய்ச் சேர்ந்தான். வீடு சேர்ந்ததும், அவ்விளைஞன் வித்தியா சாகரருக்குக் கூலி கொடுக்க வந்தபோது, அவர் மரியாதையுடன் அக்கூலிக் காசை மறுத்துவிட்டுத் தாம் போக வேண்டிய இடம் போய்ச்சேர்ந்தார்.

இதில் இன்னுமொரு வேடிக்கை: வித்தியா சாகரர் விதவை மறுமணத்தைக் குறித்து ஒரு

சொற்பொழிவு ஆற்றவே அந்த ஊருக்கு அழைக்கப் பட்டிருந்தார். அவர் வரவை அவ்வூர் வாசிகள் மிக்க ஆவலுடன் எதிர்நோக்கி இருந்தனர்; வண்டி நிலையத்துக்குச் சென்று காத்துக் கிடந்தனர். ஆனால், அவர் மிக எளிய உடையில் ஓர் இளைஞனின் கைப்பெட்டியைத் தூக்கிச் செல்லும் கூலியாளாக நிலையத்தை விட்டு வெளியேறிவிடுவார் என்பதை அவர்கள் எப்படி அறிந்திருக்க முடியும்? நல்ல உடையில் இரண்டாவது வகுப்பிலாவது அவர் வருவார் என்று அவர்கள் எதிர்பார்த்தனர். வித்தியா சாகரரோ மூன்றாவது வகுப்பில் வந்திறங்கி, தம்மை ஆடம்பரமாக வரவேற்று ஊர்வலமாக அழைத்துச் செல்ல வந்து கூடியிருந்த மக்கள் பெருங் கூட்டத்தைக் கண்டு மெல்ல அவ்விளைஞனின் கூலிக்காரனைப் போன்று நழுவித் தம்மை அழைத்திருந்தவர்கள் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டார். அவரைக் கண்டதும் அவ்வூர் மக்கள் எல்லாம் அவரது ஆடம்பரமற்ற எளிய தன்மையையும் எவர் நோக்கிலும் படாமல் அவர் நேரே அங்கு நடந்து வந்துவிட்டதையுங் கண்டு சொல்லொணா வியப்பெய்தினர்.

அதன்பின், வித்தியா சாகரர் வரவு ஊர் முழுவதும் அறிவிக்கப்பட்டு எங்கும் கொண்டாடப் பட்டது. அவரை வரவேற்று உபசரித்து, அவருடைய சொற்பொழிவைக் கேட்க அன்று அவ்வூர் மக்கள் அனைவரும் கட்டிடம் ஒன்றில் கூடி இருந்

தனர். முன் நாள் வித்தியா சாகரரைக் கூலிக் காரன் போல் நடத்திய நவீன நாகரிகத்தில் திளைத் துக் கிடந்த வாலிபனும் அவ்விடம் வந்திருந்தான். அவ்விளைஞன் வித்தியா சாகரரைப் பற்றிக் கேள்விப் பட்டவன்; அவர் பெருமையை நன்கறிந்தவன்; அவருடைய கல்வித் திறமையினும் அறிவுப் பெருக்கத்தி னும் பெருமதிப்புக் கொண்டவன். ஆனால் அவன் வித்தியா சாகரரை நேரில் பார்த்தறியான்; அக்குறை யாற்றான் அவன் முன்னாள் அவரைக் கூலியாள் போல நடத்த வேண்டியதாயிற்று. அக்கூட்டத் தின் இடையில் எளிய உடைகள் உடுத்தியிருந்த ஒரு வரை மக்கள் மிகுதியாக உபசரிப்பதை அவன் கண் டான்; கூர்ந்து அவ்வெளிய மனிதரை நோக்கிய போது, மக்களால் பெரிதும் உபசரிக்கப்பட்ட— எளிய உடை உடுத்திக்கொண்டிருந்த வித்தியா சாக ரர் நேற்றுத் தன் கைப்பெட்டியைத் தூக்கி வந்த வரே என்பதை உணர்ந்தான்; உடனே அயர்ந்தான்; தன்னைத்தானே வெறுத்தான்; தன் ஆடம்பரத்தை யும் ஆணவத்தையும் எண்ணி எண்ணி ஏங்கினான். அவ் விளைஞன் கூட்டம் முடிவடைந்தவுடன் வித்தியா சாக ரர் தங்கியிருந்த இல்லத்திற்கு ஓடோடிச் சென்று, அவருக்கு வணக்கம் செய்து, தான் அறியாமல் முன் நாள் செய்த பெரும் பிழையை மன்னித்துக்கொள் ளல் வேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்டான். அருளே உருவெடுத்தனைய வித்தியா சாகரர்—வீண்

படாடோப உடைகளினாலோ, செல்வச் செருக்கினாலோ, ஆபரண அலங்காரங்களாலோ, வெறும் ஆடம்பரங்களினாலோ எந்த மனிதரும் உயர்வடைய முடியாதென்றும், கல்வி கேள்விகளிலும் ஒழுக்கத்திலும் சிறந்து நற்குணத்தவராய் அனைவரிடத்திலும் அன்புடனும் அருளுடனும் நடந்து ஏழைகளுக்கு இரங்குகின்ற மனிதரே உயர்வடைய முடியுமென்றும் அவ்விளைஞனுக்குப் போதித்து அவனை அன்புடன் வழி அனுப்பினார்.

1857-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்திய அரசப் பிரதிநிதி **கானிங் பிரபு** கல்கத்தாச் சர்வகலா சங்கத்தை நிறுவினார். அந்தச் சர்வகலா சங்க நிர்வாகிகள் முப்பத்தொன்மருள் இந்தியர் அறுவர் தாம். அவ்வறுவருள் வித்தியா சாகரரும் ஒருவர். சர்வகலா சங்கம் நிறுவப்பட்டவுடன், முதற் கூட்டத்திலேயே போதனா முறையிலிருந்து சமஸ்கிருதத்தை எடுத்துவிட வேண்டுமென்றும், சமஸ்கிருதக் கலாசாலையையே எடுத்துவிட வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஆனால், வித்தியா சாகரர் அதைப் பலமாக எதிர்த்துத் தீர்மானத்தைத் தோற்கடித்தார். சமஸ்கிருதம், உரியா, ஹிந்தி, வங்காளம் ஆகிய மொழிகளில் அவர் பரீட்சைகள் ஏற்படுத்தினார்; பரீட்சகர்களை நியமித்தார்; தாமே வில்லியம் கோட்டைக் கலாசாலை மாணவர்களின் தாய் மொழிப் பரீட்சகராக இருந்து பார்த்து வந்

தார். அந்தக் காலத்தில் தான் வங்காளத்தில் ஆங்கிலக் கல்வி கட்டாய பாடமாக்கப்பட்டது.

1857-ஆம் ஆண்டு 'சிப்பாய்க்' கலகம் ஏற்பட்டது. அக்காலத்தில் இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் ஆட்சியே ஓர் அதிர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டது. புதுப் புது இராணுவங்கள் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் கொண்டுவரப்பட்டன; அப்போது அந்த இராணுவங்கள் தங்க இடவசதிகள் செய்து கொடுக்க வேண்டியது அவசியமாயிற்று. அதற்காக, வித்தியா சாகரர் கல்கத்தாச் சர்வகலாசாலையைச் சில நாள் மூடி, அந்தக் கட்டிடத்தை இராணுவ உபயோகத்துக்கென அளித்து உதவி புரிந்தார். நாட்டின் நன்மைக்காகவும் அரசாங்கத்தின் பாதுகாப்பிற்காகவும் என்று வித்தியா சாகரர் அக்கட்டிடத்தைக்கொடுத்து உதவியிருந்தும், தம் உத்தரவின்றி அவ்வாறு செய்தது தவறென்றும் அவ்வாறு செய்ததற்கு விளக்கம் கூற வேண்டுமென்றும் 'கார்டன் எங்' என்னும் அதிகாரி வித்தியா சாகரர்க்குக் கடிதம் அனுப்பினர்; அஞ்சா நெஞ்சம் படைத்த வித்தியா சாகரர் அவ்வதிகாரிக்குத் தக்கவாறு பதிலளித்தார்.

கல்கத்தாச் சர்வகலா சங்கம் ஏற்படுத்தப்பட்டபின் வித்தியா சாகரர் வங்க அரசாங்கத்தால் வங்காளப் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், கலாசாலைகள் ஆகியவற்றின் சிறப்புக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அப்போது கல்வியை மேலும் சற்று

மிகுதிப்படுத்தல்வேண்டுமென்று லண்டனில் இருந்த கல்வி அதிகாரிகள் தீர்மானித்தனர்; அதனால் வித்தியா சாகரர் பல ஜில்லாக்களில் புதிய பள்ளிக்கூடங்களைத் திறந்துவைத்தார். அவ்வமயம் 'கார்டன் எங்' என்பார், வித்தியா சாகரரை அழைத்து, மேலும் மிகுதியாகப் பள்ளிக்கூடங்களைத் திறக்க வேண்டாமென்று கூறினர். வித்தியா சாகரர் அதை அசட்டை செய்து, மீண்டும் பல புதிய பள்ளிக்கூடங்களை ஏற்படுத்திக்கொண்டு போகவே, அவ்வாங்கில அதிகாரி இவ்விஷயத்தைக் கவர்னரிடம் கூறினர். கவர்னரோ, வித்தியா சாகரர் செய்ததுதான் சரியென்று கூறிவிட்டார். ஆனல் இவ்வண்ணம் எதிர்ப்பினிடையே நிறுவப்பட்ட அப்புதிய பள்ளிக்கூடங்கள் நெடுநாட்கள்வரை நீடித்து நடக்கக் கூடவில்லை.

இலண்டனில் மந்திரிசபை மாறிய போது, இந்தியாவின் கல்வி விஷயத்தில் செலவிடப்படும் தொகை குறைக்கப்பட்டது. இராணுவத்திற்காக வழக்கமாக உள்ள செலவுத்தொகையுடன் பத்துக் கோடி ரூபாய் மிகுதியாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இந்தச் செய்தியை அறியாத வித்தியா சாகரர் 1857-ஆம் ஆண்டில் பல புதிய பெண் பள்ளிக்கூடங்களையும் ஏற்படுத்தினர். ஆனல், இந்தப் பள்ளிக்கூடங்கட்கு ஆகும் செலவுகளைக் கொடுக்கக் கல்வி அதிகாரி மறுத்துவிட்டார். இந்தச் சிக்கல் மீண்டும் வங்காளக் கவர்னரிடம் சென்று, அங்கிருந்து இலண்

டனிலுள்ள அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டது. கல்வி இலாகாவில் பணம் மிகுதியாகச் செலவழிக்கக் கூடாதென்று லண்டனிலிருந்து ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது. எனவே, வித்தியா சாகரர், தாம் ஏற்படுத்தின பள்ளிக்கூடங்களை நிர்வகிக்கத் தாமே பணச் செலவு செய்யவேண்டியிருந்தது. இத்தகைய கஷ்டங்கள் எல்லாம் வித்தியா சாகரரைப் பெரிதும் வாட்டி வதைத்தன. அதனால் அவர் 1858-ஆம் வருடம் தம் உத்தியோக பதவியினின்றும் நீங்கிவிட்டார். ஆயினும் அவர், தமக்குப் பின் வந்த பல உத்தியோகஸ்தர்களுக்கும் கவர்னர்களுக்கும் கல்வி சம்பந்தமான விஷயங்களில் ஆலோசனை கூறுபவராகவே இருந்துவந்தார். அவர் புகழ் ஐரோப்பியரிடை மங்காப் பொலிவு பெற்றே விளங்கியது.

## 8. தந்நலமற்ற பெரியார்

**வி**த்தியா சாகரர் அரசாங்க வேலையை விட்டு விட்ட பிறகு தாமாகவே சம்பாதித்துக்கொள்ள வேண்டியவரானார். தம் வயிற்றிற்கு உணவு தேடுவதென்பது ஒன்று மட்டும் அவரைப் பாதிப்பதாக இருந்திருப்பின், அவர் அதனைப் பொருட்படுத்தியிரார்; ஆனால், அவரே பல பள்ளிக்கூடங்களை நிர்வகிக்க வேண்டியவரா யிருந்தார்; பெரிய குடும்பப் பொறுப்பும் அவரைப் பற்றிக்கொண்டிருந்தது. முன்னரே பலவிதமான இடையூறுகளுக்கு ஆளாகியிருந்த அவர், மேலும் மேலும் பலவித இன்னல்களிற் சிக்கி உழலவே இறைவன் விதித்தான் போலும்! மனித சமூகத்தின் துயரங்களனைத்தும் அவரைச் சார்ந்தனவாகவே இருந்தன என்னல் மிகையாகாது. அவருக்கென ஒரு தனிவாழ்வு எப்பொழுதும் இருந்ததில்லை. இங்ஙனம் இருந்தும், அவர், ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கடுக்காக வந்த இடுக்கண்கள் அனைத்தையும் தைரியமாய் ஏற்றுச் சகித்துவந்தார். அவருடைய பணக் கஷ்டங்களை அறிந்த அவருடைய நண்பரும் வங்காளப் பிரதம நீதிபதியுமான **ஸர் ஜேம்ஸ் கால்வைல்** என்பவர், சட்டம் படித்து அவரை வழக்கறிஞராகும்படி கூறினார். வித்தியா சாகரர் சிறு வயதில் வழக்கறிஞர் வேலையை விரும்ப

வில்லை. ஆயினும், காலப்போக்கை அனுசரித்துத் தம் கருத்தை மாற்றிக்கொண்டு, பிரபல வழக்கறிஞர் ஒருவரிடமிருந்து சட்டங்கள் பயிலத் தொடங்கினர்; ஆனால் அஃது அவருக்குக் கடினமாகத் தோன்றியமையால் சட்டம் பயிலுவதைச் சிறிது காலத்திற்குப் பின் விட்டொழித்தார்.

துன்பங்கள் எப்போதும் தனித்து வருவதில்லை அல்லவா? 'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்பதுபோல வித்தியா சாகரருக்குத் துன்பங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து வந்துகொண்டே இருந்தன. உத்தியோகத்தை விட்டபின், பொருளீட்டுவதற்குரிய ஒரு வழி காண முயன்று கொண்டிருக்கையில், அவர் தம் காலஞ்சென்ற பாட்டியின் சிரார்த்தம் வந்தது. வித்தியா சாகரர் அதை நிறைவேற்ற மிகவும் கஷ்டப்பட வேண்டியவரானர். சிரார்த்தச் சடங்கு பிர்சிங்கா கிராமத்தில் பழைய வைதிக முறையில் செய்யப்பட்டது. அச்சடங்கை முன்னிட்டு, வித்தியா சாகரர் வீட்டுக்கு விருந்துண்ண வந்தவர் மூவாயிரவர்க்கும் மேற்பட்டவராவர். ஆயினும், வித்தியா சாகரர் மிகவும் பாடுபட்டு அந்தச் சடங்கையும் விருந்தையும் நிறைவேற்றினர். அவருடைய சமஸ்கிருத அச்சுக்கூடத்தின் மூலமும் பள்ளிக்கூடங்களுக்குத் தாம் எழுதிய நூல்களின் மூலமுமே அவருக்கு வருவாய் கிடைத்துக்கொண்டிருந்தது. ஆனல் பிற்காலத்தே ஆசிரியர் பலர் பள்ளிக்

கூட நூல்கள் எழுத முன் வந்துவிட்டமையால், வித்தியா சாகரரின் நூல்கள் அவ்வளவாக விற்பனை யாக இடமில்லாது போயிற்று. எனவே அவர், தம் அச்சுச் சாலையை ஒழுங்காக நடத்தி அதிக வருவாய் வர வழி காணவேண்டுமென்று 1859-ஆம் ஆண்டு ஒரு நிபுணரைச் செயலாளராக (Manager) நியமித் தார். அதன்பின், அச்சுச் சாலை மூலம் வரு வாய் சற்று அதிகப்பட்டதெனினும், அத்தொகை அவருடைய செலவினங்களுக்குப் போதியதாக இல்லை. அவர், விதவை மறு மணங்களுக்கெல்லாம் பண உதவி செய்யவேண்டியவராக இருந்தார். அவ ருக்கு அதிக வருவாய் வரல்வேண்டி அவருடைய நண் பர்கள் கூறிய யோசனைப்படி அவர், விதவை மறு மணத்தைக் கருத்தாகக் கொண்ட கதை ஒன்றினை நாடகமாக நடத்தினார். அதன் மூலமும் அவருக்குப் போதிய வருவாய் கிடைத்திலது.

எப்போதும் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டு மென்பதே வித்தியா சாகரரின் நினைவாக இருந்தது. பிறர் துயர் கண்டு சகியாத மனமுடைய அவர் பிற ருக்கு உதவி, பிறர் கடனைத் தீர்த்து, பிறர் துயர் நீக் கித் தாம் பல்லாயிரம் ரூபாய்கள் வரை கடன்பட்டவ ரானார்; 1860-ஆம் ஆண்டில் மஹா பாரதக் கதை கள் கொண்ட 'தத்துவ போதினி' என்ற பத்திரி கையை வெளியிட்டார்; ஆனால் அது பயனுடைய தாக இல்லை; மறு ஆண்டே வங்காளியில், 'சீதை

வனவாசம்' என்னும் ஒரு நூலை எழுதினர். அந் நூற் பிரதிகள் நன்கு விற்பனையாயின. அவர் 1862-ஆம் ஆண்டில் சமஸ்கிருத வியாகரணத்தினை வெளியிட்டார்; 1863 - ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜமீன்தார்கள், இராஜாக்கள் ஆகியோரின் குமாரர்களான மாணவர்கள் தங்கும் அரசாங்க விடுதி (Hostel) மேற்பார்வையாளராக நியமிக்கப் பட்டார். இரண்டாண்டுகள் வரை அப்பதவியில் இருந்த பின் அதனையும் விட்டு விட்டார்; 1864-ஆம் ஆண்டில் வங்காளச் சிறுவர்களுக்கென நவீன முறை யில் 'பாட புத்தகங்கள்' எழுதி வெளியிட்டார்.

அந்த வறிய நிலையிலும் வித்தியா சாகரர் சிறி தளவும் தந்நலங் கருதாத உத்தமர் என்பது பின் வரும் நிகழ்ச்சியிலிருந்து நன்கு விளங்கும்: 'மைக் கேல் மதுசூதன் தத்' என்பவர் கல்கத்தாவிலிருந்து தம் குடும்பத்துடன் சட்டம் படிப்பதற்கெனப் பிரான்சுக்குச் சென்றிருந்தார். சிறிது காலங்கழித்து, கல்கத்தாவிலிருந்த அவருடைய காரியஸ்தர் அவ ருக்குப் பணம் அனுப்புவதை நிறுத்திவிட்டார். மது சூதன் எத்தனையோ கடிதங்கள் தம் காரியஸ்தருக்கு எழுதியும் பதில் ஒன்றும் பெற்றிலர். அவர் அன் னிய நாட்டில் கடன்காரர் பலர்க்கிடையில் சிறைபுக இருந்த சமயத்தில் வித்தியா சாகரருக்கு ஒரு கடித மெழுதித் தமக்குச் சிறிது பணம் கடனாகக் கொடுத்து உதவிசெய்தல் வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

அன்னிய நாட்டில் ஆதரவின்றித் தவிக்கும் ஒரு வங்க நாட்டு அன்பரின் அல்லலை அறிந்த வித்தியா சாகரர், ஓரிடத்தில் கடன் வாங்கி, 1500 ரூபாய் முதலில் அனுப்பினர்; பிறகு, 4000 ரூபாய் அனுப்பினர்; மதுசூதன் பிரான்ஸிலிருந்து கல்கத்தா வந்து சேர்ந்த பின் உயர்தர நீதிமன்ற வழக்கறிஞர் ஆனர். ஆனல், அத்தொழிலில் அவர் நற்கியாதி பெற்றிலர். அவர், வரவுக்கு மிஞ்சிய செலவு செய்பவராக இருந்துவந்தமையால் வாங்கிய கடனைக் கொடுக்க முடியாமல் மேலும் கடன் வாங்கிக் கொண்டே காலங் கழித்தார்; வழக்கறிஞர் தொழிலில் வருவாய் கிடைக்காது போகவே, கவிகளைப் புனைவதன்மூலம் ஓரளவு வருவாய் பெற்றாரெனினும், அவருடைய அளவு கடந்த செலவுக்கு அந்தத் தொகை போதியதாக இல்லை. ஆகையால், மதுசூதன் 40,000 ரூபாய் கடன்பட்டு முடிவில் அலிப்பூர் ஆஸ்பத்திரியில் மரணமடைந்தார். வித்தியா சாகரர் மதுசூதனரால் பல தொல்லைகளுக்கு உள்ளானர். மதுசூதனருக்கு உதவி செய்த வகையில் வித்தியா சாகரர் தம் அச்சுக்கூடத்தில் முக்கால் பாகத்தை விற்பனை செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டு விட்டது.

வித்தியா சாகரர், இவ்வண்ணம் தந்நலத்தைப் பாராமல் மற்றும் பல சமயங்களில் பல கனவான்களின் கௌரவத்தைக் காப்பாற்றல் வேண்டி அரச

குடும்பங்களிடமிருந்து ஏராளமாக ஆயிரக் கணக்கில் கடனாகப் பொருள் பெற்று, உதவிசெய்திருக்கிறார். எனினும் அவரிடம் உதவி பெற்ற எவருமே அவர் மாட்டு நன்றியுடையவராக இராமல் செய்ந்நன்றி கொன்ற மாக்களாகவே காணப்பட்டனர். வித்தியா சாகரர் வெளியே போன போதெல்லாம் தம் பணப் பையைத் தம்முடனே எடுத்துச் சென்றார்; இடை வழியில் எவரேனும் ஏழைகள் வயிற்றுக்கின்றி அவத்தையுறுவது கண்டால், அத்தகையோருக்குப் பண உதவி செய்தலில் தவறாதிருந்தார்; 'சொல்லா மற் செய்வர் பெரியர்' என்னும் மொழிக்கு இலக்காக வெளியுலகம் அறிய மாட்டாத பல உதவிகள் செய்து வந்தார்.

இத்தகைய அறநோக்கம் பெற்ற வித்தியா சாகரர் வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்து வந்தமையால், பெருங் கடன்காரர் ஆனார். அதனால் தாம் ஏற்படுத்திய பல பெண் பாடசாலைகளை அவரால் நிர்வகிக்கக் கூடவில்லை. அவ்வமயம் வங்காளக் கவர்னராயிருந்த சர். சேஸில் பேடன் (1862—67) என்பவர் வித்தியா சாகரரின் பணக் கஷ்டத்தைக் கண்டு மீண்டும் அரசாங்க உத்தியோகம் ஏற்குமாறு அவரைத் தூண்டினார். 'கார்டன் எங்' என்பவரால் ஏற்பட்ட அனுபவத்துக்குப் பின் அரசாங்க ஊழியத்தை அவர் வெறுத்தனர்; ஆனால் சிறிது காலத்திற்குள் அவருக்கு நேர்ந்த பல துன்பங்களைச் சகிக்கமாட்

டாமல் அவர் வேலை விரும்பியபோது, அவருக்கு வேலை கிடைக்க வில்லை. அதன் பின், அவர் என்றும் அரசாங்க வேலையை விரும்பிலர். அவர் 1861–ஆம் ஆண்டு ஆசிரியர்களின் பயிற்சிச் சாலைக்கு அமைச்சராக இருந்தார். ஐந்தாறு ஆண்டுகள்வரை அவர் அமைச்சர் பதவியிலிருந்த பின், அப்பயிற்சிச் சாலை ஆதரிப்பாரற்று அவர் வசமே ஒப்புவிக்கப்பட்டது. அவர் தலைமையில் அது சிறப்பாக நடை பெற்று வந்தது. சிறிது காலம் கழிந்தபின், அது சர்வகலா சங்கத்துடன் இணைக்கப்படும் அளவுக்கு உயர்ந்துவிட்டது. அதுதான் முதன் முதலாக, எல்லா வகுப்புக்களிலும் இந்தியக் கலைவல்லுநர்களே ஆசிரியர்களாக இருந்த கலாசாலையாகும். 'எப். ஏ. பரீட்சை' வைக்கப்பட்ட முதல் இந்தியக் கலா சாலையும் அதுதான். அதுவே வங்காளத்தில் இரண்டாந்தரக் கலாசாலையாக நின்றது. அக்கலாசாலையின் உயர் நிலைக்கென உழைத்தவர் வித்தியா சாகரரே ஆவர். 1882-ஆம் ஆண்டில் சட்டம் போதிக்கும் உரிமையும் அக்கலாசாலைக்கு அளிக்கப்பட்டது.

வித்தியா சாகரர் தலைமை ஆசிரியராக இருந்து இத்துணை மேன்மைக்குக் கொண்டுவந்த அக்கலா சாலை, பல சீர்திருத்தங்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது. மாணவர்களை அடிக்கக் கூடாதென்றும் அன்பைக் கொண்டே மாணவர்களுக்குக் கல்வியில் ஆர்வமூட்ட வேண்டுமென்றும் வித்தியா

சாகரர் ஆசிரியர்களுக்குப் போதித்து வந்தார்; மாணவர்களும் ஆசிரியர்கள்மாட்டு அன்புடனும் மரியாதையுடனும் நடந்துகொள்ளல் வேண்டுமென் றும் பாடங்களைச் செவ்வையாகப் படித்தல் வேண்டும் என்றும் அடிக்கடி அறிவுறுத்தி வந்தார்; கலாசாலை நடந்துகொண் டிருக்கையில், ஓசை செய்யாமல் வகுப்புகளுக்குத் திடீரென்று வருவதன் மூலம் ஆசி ரியர்களையும் மாணவர்களையும் தங்கள் கடமைகளை வழுவாமற் செய்ய வேண்டுமென்று உணரச் செய்து வந்தார். இம்முயற்சிகளின் பயனாக அக்கலாசாலை வங்காளமெங்கும் புகழ் பெற்று விளங்கியது.

வித்தியா சாகரருடைய புகழ் வங்காளத்துடன் மட்டும், ஏன்? இந்தியாவுடன் மட்டும் நின்றுவிட வில்லை. மேனாட்டிலும் அவரது பெருமையைப் பலர் அறியத் தொடங்கினர். பிரிஸ்டலைச் சேர்ந்த மிஸ். மேரி கார்ப்பெண்டர் என்ற பெண்மணி வித் தியா சாகரரின் பொதுநலத் தொண்டையும், பெண் கல்விக்கான அவரது பேருழைப்பையும் கேள்வியுற்று நேரில் அவரைக் கண்டு மகிழ வேண்டுமென்று கல் கத்தா வந்து சேர்ந்தார். அப்போது கல்வி இலா காத் தலைவராயிருந்த தோழர் அட்கின்ஸன், மிஸ் மேரிக்கு வித்தியா சாகரரை அறிமுகம் செய்துவைத் தார். அவ்விருவரும் பெண் கல்வியைப் பற்றிப் பலவாறு பேசி வாதம் செய்த பின், பெண் கல்வி அதிகம் வளர்ச்சிபெற வேண்டுமாயின் பெண்களை

ஆசிரியராக முன்வரல் வேண்டுமென்றும், பெண்களை ஆசிரியராகப் பயிற்றுவித்தற்கு 'ஜனனா'க் கலா சாலை ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்றும் மிஸ் மேரி கூறினார். ஆனால், வித்தியா சாகரர் இது பலன்தரா தென்றும், வங்கப் பெண்கள் ஆசிரியராகப் பயிற்சி பெற முன்வர மாட்டார்களென்றும் இம்முயற்சி தோல்வி அடையுமென்றும் அவரை எச்சரித்தார். ஆனால், மிஸ் மேரி அவரது கருத்தைப் பொருட் படுத்தாமல் 'ஜனனா'ப் பெண்கள் பயிற்சிக் கலாசாலை ஒன்றை ஆரம்பித்தார். அஃது ஆரம்பித்த ஒன்றரை வருட காலத்திற்குள் வித்தியா சாகரர் எச்சரித்த படியே மாணவிகள் வராத குறையினால் மூடிவிட வேண்டியதாயிற்று. திடீரென ஒரு புதிய சீர்திருத் தத்தைக் கொண்டுவந்து புகுத்தி, அதன் மூலம் ஜனங்களின் எதிர்ப்பைப் பெற்றுக்கொள்ளக் கூடா தென்பது வித்தியா சாகரரது கருத்து. மெல்ல மெல்ல மக்களின் உள்ளக் கருத்தை விசாலம் அடை யச்செய்து அதன் பின்னரே, சீர்திருத்தங்களை நுழைக்கவேண்டும் என்பது அவரது நோக்கம்.

## 9. 'என்கடன் பணி செய்வதே.'

ஒரு நாள் பெண் பாடசாலை ஒன்றை மேற்பார்வையிடச் சென்று திரும்புங்கால், வழியில் வண்டி குடைகவிழ்ந்து வித்தியா சாகரருக்கு ஈரற் குலையில் பலத்த காயம் ஏற்பட்டுவிட்டது. அதிலிருந்து அவரது உடல் நலம் குன்றிக்கொண்டே வந்தது. அதனுடன் குடும்பத் தொல்லையும் அவரது ஊக்கத்தைக் கெடுத்து வந்தது. வித்தியா சாகரர் கவலை கொண்ட மனத்தினராய் உள்ளம் வாடி உருக்குலைந்துபோய் விட்டார். பிறர் துன்பம் களையவென்று—பிறர் இன்பம் பெருக்கவென்று பாடுபட்ட அப்பெரியார் துன்பக் கடலினின்று மீள வழியறியாமல் மேலும் மேலும் மூழ்கிக்கொண்டே போனார். 1866-ஆம் ஆண்டில் வங்காளச் சட்டசபையில் ஹிந்துமத தேவஸ்தான சொத்துக்களின் பரிபாலனத்திற்காகச் சட்டம் இயற்ற வேண்டுமென்று அரசாங்கத்தினருக்கு ஒரு யோசனை பிறந்தது. அதுபற்றி வித்தியா சாகரரின் கருத்துக் கேட்கப்பட்டது. அவர் அதைக் குறித்து நீண்ட நேரம் விவாதித்து, அது சட்டமாகாதபடி செய்துவிட்டார். ஏனெனின், அப்போதிருந்த மஹா ஜனங்களின் மனப் பான்மைப்படி, அது சட்டமானால், ஹிந்துக்களின் மத உணர்ச்சி புண்படுத்தப் படுவதாகும் என்று அவர் கருதினர்.

பைக்பாரா அதிபதி 'பிரதாப் சந்திர சிங்கா' என்பவர் வித்தியா சாகரரின் அருமைத் தோழர்; சீர்திருத்த மோகங் கொண்டவர்; பெண் கல்லூரி களுக்கு உதவி செய்து வந்தவர். அத்தகையவர் 1866-ஆம் ஆண்டின் இடைக் காலத்தில் பிணிவாய்ப் பட்டுக் காலஞ் சென்றார். அவருடைய சொத்துக் கள் அரசாங்க வரி முதலிய கடன்களுக்காக வேண்டி ஏலம் போடக்கூடிய நிலையில் இருந்தன. இதை அறிந்த வித்தியா சாகரர் பிரதாப சிங்கின் 'மைனர்' குழந் தைகளை வங்காளக் கவர்னரிடம் அழைத்துச் சென்று அக்குழந்தைகளுக்கு அச்சொத்துக்கள் நிலைத் திருக்குமாறு செய்துவிட்டார். அந்தச் சம யத்தில் வங்காளத்தின் தென் புறத்திலும் ஒரிஸாவி லும் மழையின்றிப் பெரும் பஞ்சம் உண்டாகி, மக் கள் உணவு கிடைக்காமல் பெருவாரியாக உயிர் துறந்தனர். பலர் தங்கள் வீடுவாசல்களைத் துறந்து, பிற ஊர்களுக்குச் செல்ல நாடி, இடை வழியில் உயிர் துறந்தனர். இப்பரிதாபச் செய்திகளைக் கேட்ட வித்தியா சாகரர் மனம் துடித்தார்; உடனே அப்பஞ் சம் நிலவிய இடங்களுக்கு ஓடினார்; நாளொன்றுக்கு ஆயிரம் பேருக்கு மேல் அன்னமளிக்க ஏற்பாடு செய்தார்; இவ்வாறு பல மாதங்கள் வரை அங் கிருந்து நாடோறும் அவ்வேழை மக்கட்கு வேண் டிய தொண்டு செய்தார்.

வித்தியா சாகரர், கூட்டுக் குடும்பமாயிருந்த தம் குடும்பத்தை 1867-ஆம் ஆண்டில் தனித்தனியே பிரித்து விட்டார். குடும்பத்தார்க்குள் ஒற்றுமையின்றி அடிக்கடி சண்டையிட்டுக்கொண்டதே இதற்குக் காரணம் ஆகும். அச்சமயத்தில் அவருடைய அருமைத் தோழர்கள் பலர் காலஞ்சென்றனர்; சீர்திருத்தத்தில் தீவிர ஆர்வம் படைத்த அன்பர்கள் பலர் வித்தியா சாகரரைத் தவிக்கவிட்டு விண்ணுலகேகினர். வித்தியா சாகரர் தம் குமாரியான **ஹேமலதா தேவியை,** நாடியாவைச் சேர்ந்த **கோபால் சந்திரர்** என்பவருக்கு 1867-ல் திருமணம் செய்து கொடுத்தார். அடுத்த ஆண்டில் மிதினபுரி மக்கள் தங்களூரில் பள்ளிக்கூடம் ஒன்று ஏற்படுத்தப் பொருள் திரட்டினர்; பிறரிடம் பணம் பெறுமுன் வித்தியா சாகரரிடம் சென்றனர். அவரோ, முன் ஆண்டுதான் தம் குமாரிக்குத் திருமணம் செய்து வைத்துப் பெரும் பணக்கஷ்டத்தில் இருந்தும், அதைச் சிறிதும் கருதாமல் அப்பள்ளிக்கூட அமைப்புக்கு வேண்டியிருந்த ஐந்நூறு ரூபாயையும் கொடுத்து உதவினர். அடுத்த ஆண்டு பர்துவானில் மலேரியா ஜுரம் பரவிவிட்டது. மக்கள் தீயிற்பட்ட புழுவெனத் துடித்து மடிந்தனர். அப்போதிருந்த அரசாங்க 'ஸிவில் சர்ஜன்' அதைப்பற்றிச் சற்றேனும் கவலைப்படாமலும் தகுந்த மருந்து கொடாமலும் அசட்டையா யிருந்தனர்.

இதை அறிந்த வித்தியா சாகரர் கவர்னரிடம் சென்று முறையிட்டு, வேறு நல்ல 'ஸிவில் ஸர்ஜனை' அங்கு நியமனம் செய்யச் செய்தார்; தம் இல்லத்திலும் இலவச வைத்தியசாலை ஒன்றைத் திறந்து, ஏழைகளுக்கு இலவசமாக மருந்து கொடுத்துவந்தார்; வீடு வீடாகச் சென்று ஒவ்வொரு பிணியாளரையும் நேரிற் கண்டு ஆறுதல் கூறி மருந்தளித்துவந்தார்; அச்சமயத்தில் இரண்டாயிரம் ரூபாய்க்குப் புதிய ஆடைகள் வாங்கி, ஏழை மக்களுக்கு வழங்கி உதவி செய்தார்; இவ்வாறெல்லாம் முயன்று அம் மலேரியா ஜுரம் மேலும் பரவ ஒட்டாமல் தடுத்து விட்டார்; இவ்வகையிலும் அவருக்கிருந்த கடன் மேலும் சற்று அதிகமாகிவிட்டது; எனவே, ஷேக்ஸ்பியர் என்ற ஆங்கில நாடகாசிரியருடைய விகடக் கதையொன்றை (Comedy of Errors) வங்காளி மொழியில் பெயர்த்து வெளியிட்டார். இந்நூல் நன்முறையில் ஏராளமாக விற்பனை ஆயிற்று; அவர் கடனும் சிறிது குறைந்தது.

அவர் ஒரு முறை ஓர் ஊருக்குச் செல்லும் வழியில் எளியவன் ஒருவன் அவரது உதவியை நாடினான். அவர் அவனுக்கு ஒரு ரூபாய் கொடுத்தார். அவன் அதைக் கொண்டு மாங்காய்கள் வாங்கி விற்கத் தொடங்கி, மெல்ல மெல்ல நன்னிலை அடைந்தான். பின் ஒரு முறை வித்தியா சாகரர் மீண்டும் அவ்வூருக்குச் செல்ல நேர்ந்தபோது, அவன் அவரை எதிர்

கொண்டழைத்து, பிச்சைக்காரனாக இருந்த தன்னை அந்நிலைக்கு உயர்த்திய அவ்வள்ளல் பெருமானை வாயார வாழ்த்தி, மனமாரப் போற்றி மகிழ்ந்தான்.

வித்தியா சாகரர் வாக்குறுதி பிறழாத வன்மை உடையவர்; அஞ்சா நெஞ்சமும் ஆற்றலும் படைத்தவர்; தமக்கு நெருக்கடி மிகுந்து, தம் சமஸ்கிருத அச்சுக்கூடம் பயன்தரக் கூடாததாக ஆன சமயத்தில் அதை ஒருவருக்குக்கொடுத்துவிட்டார். ஆனால், அதற்குப் பின்னர் அதே அச்சுக்கூடத்தைப் பதினாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கிக்கொள்வதாக மற்றொருவர் முன் வந்தார். எனினும் முதலில் தாம் கொடுத்துவிட்ட வாக்குறுதியைக் கோடி ரூபாய் வருவதாக இருந்தாலும் மீற முடியாதென்று வித்தியா சாகரர் மறுத்துக் கூறிவிட்டார். நிலை தாழ்ந்த போதிலும் பெரியார் பெரியரே அல்லரோ?

1869-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11-ஆந் தேதி பதினாறு வயதேயான பவசுந்தரி தேவி என்னும் பெண்ணின் கணவன் காலஞ்சென்று விடவே, அவள் கைம்பெண்ணாகிக் கதறினாள். அவள் துயர் கண்டு சகிக்க முடியாத வித்தியா சாகரர் அவளைத் தம் ஒரே குமாரனான இருபத்தொரு வயதுடைய நாராயண சந்திரனுக்குத் திருமணம் செய்து வைத்தார். அவர் குடும்பத்தைச் சேர்ந்த சிலர் முதலில் அந்தத் திருமணத்தை எதிர்த்தனர் எனினும் இறுதியில் மனமுவந்து வரவேற்றனர்.

வித்தியா சாகரர், 1871-ஆம் ஆண்டில், உத்தர ராமாயணம், சாகுந்தல நாடகம், சிசுபால வதம், காதம்பரி, ரகுவம்சம், ஹர்ஷ சரித்திரம் ஆகிய நூல்களை எல்லாம் மறு பதிப்பாக வெளியிட்டார். அச்சமயத்தில்தான் உலகம் போற்றும் உத்தமராகிய இராம கிருஷ்ண பரம ஹம்சர் தம் சீடர்களுடன் வித்தியா சாகரரிடம் சென்று அவரைக் கண்டு அன்புடன் தழுவி, அளவளாவிப் பேசி ஆனந்தக் கடலுள் ஆழ்ந்தார்.

வித்தியா சாகரர், விதவை மறு மணத்தை ஆதரித்து, அதற்காகப் பேருக்கத்துடன் உழைத்து வந்தது போல, மற்றொரு நலமிக்க செயலொன்றையும் ஆற்றினர் என்பது ஈண்டு அறியத் தக்கது: வங்காளத்தில் 'குலின் பிராமணர்' என்றொரு பிரிவினர் இருந்தனர். அவர்களுள் ஆடவர் பல மனைவிகளை மணந்துகொள்வது தொன்றுதொட்ட வழக்கமாக இருந்துவந்தது. அதனால் ஹிந்து சமூகம் பலவிதத் தீமைகளுக்கும் ஒழுக்கக் கேடுகளுக்கும் உறைவிடமாகி வந்ததென்பதை வித்தியா சாகரர் நன்கறிந்திருந்தார்; எனவே, அவர் அவ்வழக்கத்தைக் கண்டித்துப் புதியதொரு கிளர்ச்சியைத் தோற்றுவித்தார். வித்தியா சாகரரின் உறவினருள் ஒரு பெண், இவ்வண்ணம் வேறு பல மனைவியரை மணந்துகொண்ட கணவனால் ஒதுக்கப்பட்டு அல்லலுக்கு ஆளானள். அவளது பரிதாப நிலைமை, புதிய

கிளர்ச்சியை மேலும் பலப்படுத்திவிட்டது. இப்பலதார மணவழக்கத்தைச் சட்டத்தின் மூலம் ஒழித்தல் வேண்டுமென்று கருத்துக்கொண்ட வித்தியா சாகரர் 'மஹதாப் சந்திர பஹதூர்' என்பவரின் தலைமையில் 25,000 வங்காள மக்கள் கையொப்பமிட்ட விண்ணப்பம் ஒன்றை வங்காள அரசாங்கத்தினிடம் சமர்ப்பித்தார். இது போன்ற பல விண்ணப்பங்களும் அரசாங்கத்துக்குத் தொடர்ந்து அனுப்பப்பட்டு வந்தன. அதுபோது, அரசாங்கம் இதில் தலையிட்டுச்செய்யக் கூடியது ஒன்றுமில்லை எனினும், பிரபல வங்காளத் தலைவர்கள் பலர் ஒன்றுகூடிப் பலதார மணத்தை ஒழிக்க மேலும் மேலும் அரு முயற்சிகள் எடுத்துக்கொண்டமையால், வங்காளக் கவர்னர் முன்வந்து பலதார மணத்தால் தோன்றும் தீமைகளை ஆராய்ந்து அறிவிக்க, குழு ஒன்றை நியமித்தனர். அக் குழுவின் ஆராய்ச்சி ஹிந்துக்களின் வைதிக நெறிக்கு மாறு விளைவிக்காமலும், பலதார மணத்தின் தீமையை அகற்றவும் முயலும் வழியில் சென்றுகொண்டிருந்தது. அப்போது வித்தியா சாகரர் தனித்திராமல் பலதார மணத்தைக் கண்டித்துப் பலவாறான துண்டுப் பிரசுரங்களை வங்காள மொழியில் எழுதி வெளியிட்டுப் பரப்பினர். வழக்கப்படியே வைதிகர்கள் வித்தியா சாகரரின் சீர்திருத்தப் போக்கைக் கண்டித்தே வந்தனர். எனினும் காலப் போக்கில் வங்காளச் சமூகத்தினர் பல

தார மணத்தினுல் ஏற்படும் தீமைகள் அனைத்தையும் உணர்ந்து மெல்ல மெல்ல அவ்வழக்கத்தைக் கை விடலாயினர்; வைதிகரின் விதண்டா வாதங்களை வெறுத்தனர். வித்தியா சாகரர் தொடங்கின இவ் வியக்கம் பின்னர்த் தகுந்த பலன் அளித்ததென்றே கூறியமைதல் வேண்டும். பல குடும்பத்தினர் பல மனைவியரை மணக்கும் வழக்கத்தைக் கை விட்டனர்; பெண்மக்கள் சமூகம் அவரைப் போற்றியது.

# 10. இறுதிக் காலம்

தொல்லைகள் வளர்ந்து கடன் துன்பம் பெருகி நாளுக்கு நாள் கவலைகள் அதிகரித்தன எனினும், ஆற்றற்குரிய கடமைகள் அனைத்தையும் ஆற்றித் தான் ஆகவேண்டு மல்லவா? அதன்படி வித்தியா சாகரர், 1872-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தம் இரண்டாம் குமாரியாகிய குமுதினி தேவியை 'ருத்ராபூரை'ச் சேர்ந்த அகோரநாத சாட்டர்ஜீ என்பவருக்குத் திரு மணம் செய்துவைத்தார். ஆனால் வித்தியா சாகரரின் ஒரே குமாரனாகிய நாராயண சந்திரன் அவ்வமயம் தந்தையுடன் மனத் தாங்கற்பட்டு, தந்தையை விட்டுப் பிரிந்துவிட்டான். தினமாயீ தேவியார் இதில் தலை யிட்டு ஒற்றுமைக்கு எவ்வளவோ முயன்றும் பயனில் லாமற் போய்விட்டது இப்படி இருந்தும், நாராயண சந்திரனின் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் வித்தியா சாகரர் உதவி செய்துகொண்டே வந்தார்.

அவர், 1872-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 'ஹிந்து குடும்பச் சேமநிதி' என்றொரு நிதியைத் தோற்று வித்துப் மக்கள் தம் பணத்தைச் சேமித்துப் பிற் காலச் சந்ததிகளுக்கு உதவவேண்டுமென்ற ஒரு கருத்தை அவர்களிடைத் தோற்றுவித்தார். 1875-ஆம் ஆண்டுவரை அந்நிதி ஒழுங்குபட நடைபெற்று வந்தது. பிறகு, அதன் உறுப்பினர்களால் சில

தவறுகள் ஏற்பட, அவற்றைத் திருத்திக்கொள்ள அவ்வுறுப்பினர் முன்வராமையினுல், வித்தியா சாகரர் தாமே அதனின்று விலகிக்கொண்டார். அவர் விலகிய பின், பிற உறுப்பினர் அதனை நடத்த மாட்டாராயினர்; அதனுல் அரசாங்கத்தில் அந்நிதி சேர்க்கப்பட்டுவிட்டது.

1871 முதல் 74-ஆம் ஆண்டு வரை வங்காளக் கவர்னரா யிருந்த ஸர் ஜார்ஜ் காம்பேல் கல்வி இலாகாவில் சில சீர்திருத்தங்களைச் செய்தார். அச்சீர்திருத்தங்களை வித்தியா சாகரர் சற்றும் அஞ்சாமல் எதிர்த்து வந்தார்; "ஹிந்து தேசாபிமானி" என்ற பத்திரிகையில் தம் கருத்துக்களை விளக்கி எழுதிவந்தார். இதன் பலனுக அவருடைய நூல்கள் பல பள்ளிக் கூடங்களுக்குப் பாட புத்தகங்களாக வைப்பதினின்று தடுக்கப்பட்டன. இதனுல், வித்தியா சாகரருக்குப் பெரும் பணத்தொல்லை நேர்ந்தது. இடையரு உழைப்பின் மிகுதியால் வித்தியா சாகரர் உடல் வலிமையும் குன்றியது அவர் தம் உடற் சுகம் நாடி 'கர்மதார்' என்ற இடத்திற்குச் சென்று ஒரு சிறு குடில் கட்டி, அதில் வாழ்ந்து வந்தார்.

அந்தப் பகுதிகளில் ஒடுக்கப்பட்ட மக்களே வசித்துவந்தனர். அவ்வேழை மக்களனைவரும் அவரிடம் மிகுந்த மரியாதை காட்டினர்; மிக்க அன்புடன் அவரை ஆதரித்து வந்தனர்; வித்தியா சாகரரும் அவ்வேழைகளுக்கு உணவு, உடை முதலியன

அளித்து உதவி புரிந்து வந்தார்; பிணியுற்றோருக்கு மருந்துகள் இலவசமாகக் கொடுத்து வந்தார்; அம் மக்களும் அவருக்குக் காய்கறிகள் கொணர்ந்து கொடுத்தனர். ஒருநாள் ஓர் ஏழை தன்னிடமிருந்த சேவலை வித்தியா சாகரருக்குக் கொடுத்தான். அவர், தாம் பிராமணர் என்று தம் பூணூலை எடுத்துக் காண்பித்து அதனை ஏற்க மறுத்தும், அவன் கண்ணீர் உகுக்கத் தொடங்கினமையால், அச்சேவலை அவனிடமிருந்து பெற்று, அதற்குச் சுயேச்சை அளித்துவிட்டார். இவ்வாறு அனைவர் உள்ளமும் கொள்ளை கொண்ட வித்தியா சாகரர் சிறிது காலம் அங்கிருந்துவிட்டு மீண்டும் கல்கத்தா மீண்டனர்.

வித்தியா சாகரர் 1874-ஆம் ஆண்டின் இடையில் தம் மூன்றாம் குமாரி விநோதினி தேவியை, ஹரி கலாசாலை ஆசிரியர் சூர்ய குமார் அதிகாரி B. A. என்பவருக்குத் திருமணம் செய்து வைத்தார். சிறிது காலம் கழிந்த பின், சூர்யகுமார் "மெட்ராபாலிட்டன் கலாசாலை"யின் தலைவர் ஆனார். வித்தியா சாகரருக்கு விஞ்ஞான சாஸ்திர வளர்ச்சியில் அவா மிக்கிருந்தது. 'இந்திய சங்கம்' என்னும் பெயரால் ஓர் இயக்கம் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தது. அதன் பணக்கஷ்டத்தை அறிந்த வித்தியா சாகரர் அதற்கு ஆயிரம் ரூபாய் நன்கொடை அளித்தார். அதே ஆண்டின் இறுதியில் தம் கடைசிக் குமாரியான சரத்குமாரி தேவியை, கார்த்திக சந்திர சாட்

டார்ஜீ என்பவர்க்குத் திருமணம் செய்து கொடுத்தார். 1880-ஆம் ஆண்டின் புது வருடக் கொண்டாட்டத்தின்போது, வித்தியா சாகரருக்கு மற்றொரு (C. I. E) கௌரவப் பட்டமும் அரசாங்கத்தால் அளிக்கப்பட்டது. அவருடைய முயற்சியால் வங்காளத்தில் பல இடங்களில் பெரும் பொருட்செலவில் கலாசாலைகள் கட்டப் பட்டன.

வித்தியா சாகரரின் பிரிய மனைவியாரான தினமாயீ தேவியார் 1888-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13-ஆந் தேதி காலமானார்; அதனால், வித்தியா சாகரர் மிக்க பலங் குன்றினார்; மனம் வருந்தினார். அந்நிலையிலும் அவர் அடிக்கடி பள்ளிக்கூடங்களையும் கல்லூரிகளையும் கலாசாலைகளையும் பல்லக்கில் ஏறிச் சென்று பார்வையிட்டு வந்தார்; 1890-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிர்சிங்கா கிராமத்திலிருந்த உயர்தரப் பள்ளிக்கூடத்தைப் புதுப்பித்து அதற்கு, காலஞ்சென்ற தம் அன்னையாரின் பெயரிட்டார்; தம் உடற்சுகம் கருதி, சந்திர நாகூருக்கும் பிற இடங்களுக்கும் சென்றார்; வயதேறியதால், உழைப்பின் மிகுதியால், மூப்பும் பிணியும் அவரைப் பற்றத் தொடங்கிவிட்டன.

1891-ஆம் ஆண்டின் தொடக்கத்தில், '**குழந்தைத் திருமணத் தடைச் சட்டம்**' ஒன்றை உண்டாக்குவதுபற்றி, வித்தியா சாகரரின் கருத்தினை, அரசாங்கத்தார் நாடினர். அவர் சாஸ்திரங்களை எல்லாம் ஆராய்ந்து குழந்தை மனைவிகளின் பாதுகாப்

புத் திட்டமொன்றைச் சமர்ப்பித்தார். அரசாங்கம் அச்சட்டத்தைத் திருத்தமின்றி நிறைவேற்றியது. இதுதான் அவருடைய இறுதிச் சீர்திருத்தத் தொண்டாகும். பிறகு மீண்டும் அவர் சந்திர நாகூர்க்குச் சென்றிருந்து நோயாளராய்ப் படுக்கையிற் கிடந்தார். நோய் நாளுக்கு நாள் அதிகரித்து வித்தியா சாகரர் பிழைப்பார் என்ற நம்பிக்கை நீங்கியது. நான்கு நாட்களாய்ப் பேச்சற்றுப் படுக்கையில் கிடந்த அவர், மேல்புறச்சுவரில் மாட்டப்பட்டிருந்த தம் அன்னையாரது படத்தின் பக்கம் தம் தலையைத் திருப்பி அதனைப் பார்த்துக் கண்ணீர் உகுத்த வண்ணமே 1891-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29-ஆந் தேதி புதன்கிழமை வைகறையில் தம் பூத உடலை நீத்தார்.

வித்தியா சாகரர் சவம், வங்க மக்கள் அனைவராலும் தரிசிக்கப்பட்டது. வங்காளக் கவர்னர் முதல் வண்டியிழுக்கும் கூலி யீறாக, பண்டிட் ஈஸ்வர சந்திர வித்தியா சாகரர் C. I. E. அவர்களுடைய சவத்துக்குத் தங்களுடைய இறுதி மரியாதையைச் செய்தனர். அன்று மாலை இலக்ஷக்கணக்கான மக்கள் மனத்துயரத்துடன் பின் தொடர, வித்தியா சாகரரது உடல் 'நிம்தாலா' நன்காட்டில் ஐந்து மணிக்குத் தகனம் செய்யப்பட்டது. வித்தியா சாகரரின் குமாரர் நாராயண சந்திரர், தந்தையார் சவத்திற்குத் தீ மூட்டினார். வங்காளம் முழுவதும், ஏன்?

இந்தியா முழுவதுமே அன்று துன்ப மயமாக இருந்ததென்னல் மிகையாகாது. வித்தியா சாகரர் உயிர் வாழ்ந்திருந்த எழுபத்தொரு ஆண்டுகளும் இந்திய சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஆண்டுகளாகும் என்பது மிகையாமோ ?

வித்தியா சாகரர் பிரிவு வங்க மக்களால் ஆற்ற முடியவில்லை. வங்கக் கல்வி இலாகா நிலையங்கள் அனைத்தும் அவர் பிரிவினன்று மூடப்பட்டன. எங்குப் பார்த்தாலும் அனுதாபக் கூட்டங்கள்தாம். பத்திரிகைகளிலெல்லாம் வித்தியா சாகரர் பிரிவைப் பற்றிய செய்திகளே காணப்பட்டன. வித்தியா சாகரர் பெயரால் பரிசுகளும், உபகாரச் சம்பளங்களும், இலவச வாசக சாலைகளும், ஆஸ்பத்திரிகளும் நிறுவப்பட்டன ; அவரது நினைவை வலியுறுத்த வெள்ளைத் தூய பளிங்குக் கல்லில் அவரது சிலையொன்று செய்யப்பட்டு, சமஸ்கிருதக் கலாசாலையின் முன் நிறுத்தப் பட்டுள்ளதை இன்றும் காணலாம்.

வித்தியா சாகரர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் சீர்திருத்த வீரர் ; கல்விக் களஞ்சியம் ; இந்தியரின் கல்வித் திறமையை உலகத்தவருக்கு விளக்கிக் காட்டியவர் ; வங்க மொழியைச் செம்மைப்படுத்தியவர் ; கைம்பெண் மணத்தைக் கண்டவர் ; பெண் கல்வி பரப்பியவர் ; குழந்தை மனைவிகளுக்குப் பாதுகாப்பளித்தவர்; சமஸ்கிருதம் முதலாய கல்வியனைத்

தும் தீண்டப்படாத மக்களும் படிக்கலாமென்று கூறி, பிறப்பில் கருதப்படும் பேதங்களை மறுத்தவர்; பல மனைவியரை மணக்கும் வழக்கத்தைத் தொலைத்தவர்; வங்க மொழியில் புத்தம் புதிய நூல்கள் எழுதிக் கலைக்குப் புத்துயிரளித்தவர்; பழைய வைதிகக் கொள்கைகளைத் திடீரென்று ஒழிக்காமல், மெல்ல மெல்லத் திருப்பிச் சீர்திருத்தும் ஆற்றல்பெற்ற நிபுணர்.

இத்துணைப் புகழுக்கும் பெருமைக்கும் வித்தியா சாகரர் இலக்காயிருந்தும், வாழ்க்கையில் மிக எளியவராகவே இருந்து வந்தார்; என்றும் ஆடம்பரத்தை எண்ணுதவர்; புகழையோ கௌரவத்தையோ விரும்பாதவர்; கடமையை ஆற்றுவதில் கடுகளவும் தவருத கரும வீரர்; எக்குலம், எந்நிறம், எக்கொள்கை, எச்சமயத்தினரா யிருந்தபோதினும் மனிதப் பிறவியினர் அனைவரும் சமமே என்ற பெரு நோக்கம் கொண்டவர். இரங்கினோர்க்கு இல்லை என்னுத இவ்வுத்தமரைத் 'தயா சாகரர்' (கருணைக் கடல்) என்று அழைப்பதே தகுதி.

'பெற்றோரே பெருந் தெய்வம்' என்பது வித்தியா சாகரர் கொள்கை. அதை அவர் தம் வாழ்க்கையில் மெய்ப்பித்துக் காட்டினர். இந்தியருக்கு ஒரு நல்ல வழிகாட்டியாகவும் அரிய சீர்திருத்தத் தலைவராகவும், கலாஞானக் குன்ருகவும் இருந்து நம் நாட்டிற்குப் பெருமை உண்டாக்கி வைத்த வித்தியா

சாகரரின் பூத உடல் மறைந்தது. எனினும், இன்றும் நம்மிடையில் அவருடைய புகழுடல் நின்று நமக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஊட்டியே வருகின்றதென்பதில் ஐயமுண்டோ? இப்பெரியாருடைய சீரிய வாழ்க்கையும் நேரிய குண நலனும் நம் இளைஞர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளா தொழியுமோ?

## 11. குணாதிசயங்கள்

உத்தம வாழ்வு நடத்திச் சென்ற பெரியார்களின் வரலாறுகளைப் படிப்போர் பல உண்மைகளைக் கற்று, அவற்றிற்குத் தக நின்று தங்கள் வாழ்வினைச் செப்பம் செய்து கொள்ளல் வேண்டும். இதற்கு அத்தகைய பெரியார்களின் குணாதிசயங்கள் பெரிதும் உதவி புரியும். ஈஸ்வர சந்திர வித்தியா சாகரர் மிக எளிய குடும்பத்தில் பிறந்தார்; வறுமையைத் தவிர மற்றொன்றைக் கண்டிராத நிலையில் வளர்ந்தார்; பள்ளியிற் சேர்ந்து படிக்கப் பணம் இருந்ததா? இல்லை. ஆனால் ஊக்கம் மிகுந்திருந்தது; மன உறுதி இருந்தது. அவ்விரண்டும் உள்ள இடத்தில் உயர்வு தானாக உண்டாதல் இயற்கை. நம் தமிழ்நாட்டில் பிறந்த நீதிபதி முத்துசாமி ஐயர் தெரு விளக்கில் படித்து உயர்வு பெற்று ஊக்கத்துக்கும் உழைப்புக்கும் உதாரணமானது போன்று, தெருக்களில் உள்ள மைல் கற்களிலிருந்து ஆங்கில நெடுங் கணக்கைக் கற்றும், முதிர்ந்த வயதில் ஆங்கிலத்தைக் கற்றும் அறிவுக்குன்றாய்த் திகழ்ந்த ஈஸ்வர சந்திரரும் இன்று நமக்கு ஊக்கத்தின்-உழைப்பின்-உயர்வை உணர்த்தவல்ல ஓர் எடுத்துக் காட்டாய் மிளிர்கின்றார்.

ஈஸ்வர சந்திரர் உழைப்புக்கு அஞ்சிப் பின்வாங்கிய நாள் என்றுமில்லை. இரவு பத்து மணிக்குப்

படுத்தார்; இரண்டு மணி நேரம் உறங்கினார்; பன்னிரண்டு மணிக்கு விழித்து எழுந்து விடியும் வரை படித்தார்; எழுதினார்; பின் குளித்துக் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு சமையல் செய்தார்; விறகு வெட்டிக்கொண்டார்; கடைக்குப் போய், காய்கறிகள், உணவுப் பொருள்கள் வாங்கிவந்தார். தம் உடைகளைத் தாமே தினந்தோறும் துவைத்து உலர வைத்துக்கொண்டார். இத்துணை வேலைகளுக்கு இடையிலும் அவர் படிப்பை விடவில்லை என்றால் அவரது ஊக்கம் எத்தகையது பாருங்கள்! காய்கள் நறுக்கிக் கொண்டே ஒரு கவியை மனப் பாடம் செய்து விடுவது அவர் வழக்கம். கட்டை பிளந்து கொண்டே அக்கவி பிழையின்றி மனப்பாடமாகி இருக்கிறதா என்று ஒப்புவித்துப் பார்த்துக்கொள்வது அவர் இயற்கை. இது போன்று எந்த வேலை செய்துகொண்டிருந்த போதினும் அவர் மனம் கல்வியினை மறந்திலது. வேலைகளும் ஆகும்; அவர் படித்தவைகள் மனப்பாடமும் ஆகும். அவருக்கு உழைப்பில் அயர்வு ஏற்பட்டதில்லை; அச்சம் தோன்றியதில்லை. ஆகவே அவர் முகம் எப்போதும் சிடுசிடுப்பின்றி அன்றலர்ந்த மலர் போல் இருந்தது; அவர் எவரிடத்தும் கடுத்துப் பேசியதுமில்லை.

அவரிடம் பொறுமையும், சகிப்புத் தன்மையும் அதிகமாகக் குடிகொண்டிருந்தன. வேலைகள் மிகுவதன் மூலம் அவர் பொறுமை இழந்ததில்லை. அவர்,

தமக்கு ஆத்திரமூட்டும் வண்ணம் பிறர் ஏதேனும் செய்துவிடினும் சகிப்புத் தன்மையை மீறுவதில்லை. பள்ளிக்கூடத்தில் அவருடைய உருவத்தைக் குறித்து இதர குறும்பு மிக்க பிள்ளைகள் பரிகசித்த போழ்தும் அவர் மனம் வருந்தியதில்லை. பின்னர், அவர் வாழ்க்கையில் ஏற்பட்ட பலவிதக் கஷ்டங்களும் அவரைப் பொறுமை இழக்கச் செய்துவிடவில்லை. ஈஸ்வரர் பொறுமைக்கு ஓர் அணிகலனாகவே திகழ்ந்தார். அவர் உள்ளம் பொறுமையால் பூரணம் அடைந்திருந்தது.

அவர் ஏழ்மை மிகுந்தவராய் இருந்தும் வறுமையில் வாடுபவர்களைக் கண்டபோதெல்லாம் மனம் உருகினார். அவர் உதவி வேண்டுபவர்களுக்கு உதவி செய்ய எந்நாளும் பின் வாங்கியதில்லை; தம்மிடம் பணம் இல்லையெனின், பிறர்பால் பெற்றாயினும் வருந்துவோர் துயர் களைந்தார். அவர், ஏழைகளின் துன்பம் போக்கவே வாழ்ந்தார்; உழைத்தார்; உண்மையான நலன்கள் ஏற்பட வழி புரிந்தார்; இறுதியில் ஏழை மக்கட் பணியிலேயே உயிர் துறந்தார்.

ஆடம்பரம் என்றால் ஈஸ்வரர்க்கு மிக்க வெறுப்பு. அவர் பிறந்த வங்க நாட்டில் ஏழை மக்களிடை வழக்கமாக உள்ள வேஷ்டி, சட்டை, ஒரு துண்டு ஆகிய எளிய உடையே அவருடைய கம்பீர உடை. அவ்வுடையுடனேயே அவர் கவர்னரைக் காண்பார்; கவர்னருடன் பேசுவார்; அதிகாரிகளைக் காண்

பார். அவ் வெளிய உடைதான் அவருக்கு உத்தி யோக உடை. அவர், எந்தக் காரியமாயினும் அதற்கு வேறு ஆடம்பர உடை உடுத்திச் செல்வதை என்றும் விரும்பிலர்; அவரிடம் வேறு சிறந்த உடைகளும் இல்லை. அவர்தம் எளிய உடையின் காரணமாக ஒரு பெரும் நிலயத்திற்குள் விடப்பட்டிலர். அவர் தாம் வித்தியா சாகரர் என்பதை அறியாத இளைஞன் ஒருவன் அவரைக் கூலிக்காரனைப் போன்று நடத்தினன். இவ்வளவிருந்தும் அவர் தம்மை இழிவுபடுத்தியவர்களிடம் மலர்ந்த முகத்துடன் நடந்தனரே அன்றிச் சினங் கொண்டாரிலர்; தம் உடைகளையும் மாற்றிக் கொண்டாரிலர். ஒரு முறை வங்காளக் கவர்னர் தம் தோழரான ஈஸ்வரரை உத்தியோக உடையில் வருமாறு விண்ணப்பித்துக் கொண்டார். ஈஸ்வரரும் அங்ஙனமே சில நாட்கள் சென்றார். ஆனல், அவருக்கு எளிய உடைகளில் இருந்த விருப்பம் ஆடம்பர உடைகளில் இல்லை. அவ்வாடம்பர உடைகள்மீது அவருக்கு வெறுப்பே ஏற்பட்டது. அவர், கவர்னரது நட்புப் போனலும் சரி, தாம் உடைகளை மாற்றிக்கொள்ள முடியாது என்பதை உணர்ந்தார்; கவர்னரிடம் அதை அறிவித்துவிட்டார். அவர் உள்ளத் தூய்மையைக் கண்ட கவர்னர் ஈஸ்வரரின் விருப்பப்படி இணங்கிவிட்டார் எனின், ஈஸ்வரரின் மனவுறுதி, அஞ்சா நெஞ்சம், எத் தகையின என்பதை நீங்களே எண்ணிப் பாருங்கள்!

ஈஸ்வரர் ஒருபெரும் சீர்திருத்த வீரர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் அவர் இந்திய சமூகமாகிய செழிய வயலில் சீர்திருத்தம் என்னும் வித்துக்கள் இட்டார். இன்று அவை மரங்களாகிப் பல இடங்களில் பலன்களாகிய கனிகள் தரத் தொடங்கி இருக்கின்றன. இன்று அரசியல் வாதிகளும், சமூக சீர்திருத்தக்காரர்களும் உழைப்பது அனைத்தும் அப் பெரியாரிட்ட வித்துக்களிலிருந்து தோன்றிய தருக்கள் முழுப் பலன் தரல்வேண்டும் என்பதற்காகவே. அக்காலத்தில் பெண் கல்வி என்பது பாவத்தொழில் என்று மத அறிஞர்களால் கருதப்பட்டது. பெண் கல்வி, பெண் தன்மையையும் பெண்கள் குண நலனையும் கற்பையும் குலைக்கும் என்று வைதிக அறிஞர் வாதாடினர். வித்தியா சாகரர் அவ்வாதங்களை அசட்டை செய்து, பெண் கல்விக்கு உயர்வு தந்தார்; பெண் கல்வியின் அத்தியாவசியத்தைச் சமூகம் உணருமாறு செய்தார். அக்காலத்தில் நம்நாட்டில் கைம்பெண்களின் நிலையே சொல்ல ஒண்ணுக் கொடுமை வாய்ந்ததாக இருந்தது. பல இளம் கைம் பெண்கள் கணவர் சவங்களுடன் கூட்டிவைத்து எரிக்கப்பட்டனர். கைம்பெண்கள் உயிருடன் இருப்பது பெருந்தவறு எனச் சமூகம் கருதியது. மனித சமூகம் கைம்பெண்களைப் பாவ ஆத்மாக்களாகக் கருதியது; அவர்களை அழிப்பதுதான் சமூகத் தூய்மைக்கு வழி என எண்ணியது. ஆனால், இராஜா

ராம் மோகன்ராய் அக்கொடிய வழக்கத்தை ஒழித்தார். அவருக்குப் பின் தோன்றிய வித்தியா சாகரர் கைம் பெண்கள் மனித இனத்துக்குப் புறமான வர்களைப் போன்று நடத்தப்படுவதைக் கடிந்தார்; தர்ம சாத்திரங்களை, சமயச் சட்ட நூல்களை ஆராய்ந்தார்; கைம்பெண்களின் நிலையை உயர்த்த, அவர்களுக்கு மறுமணம் செய்துவைக்க, அவர்களையும் மக்களாகக் கருதி நடந்துகொள்ள அந்நூல்கள் அனுமதிக்கின்றன என்பதைக் கண்டு அதனை எத்தகைய எதிர்ப்புக்கும் அஞ்சாமல் எங்கும் பரப்பினர்; கூட்டங்கள் கூட்டினர்; பேசினர்; வாதிட்டார்; எழுதினர்; துண்டு வெளியீடுகள் வெளியிட்டார்; அரசாங்கத்தை அணுகிக் கைம்பெண்கள் மறுமணம் செய்துகொள்ளலாம் எனச் சட்டமும் செய்து வைத்தார்; எவர் எதிர்ப்புக்கும் அவர் சற்றும் அஞ்சினரில்லை.

கைம்பெண்கள் மறுமணத்திற்கு வழி செய்த வித்தியா சாகரர், சமூகத்தில் கைம்பெண்கள் அதிகம் ஆகாதிருக்கவும் வழிகோலினர்; கைம்பெண்கள் பெருக்க மூலகாரண மென்ன என்பதை ஆராய்ந்தார்; ஒருவர் பல மனைவியரை மணக்கும் வழக்கம், சிசுக்களுக்குக் கல்யாணம் செய்தல் போன்றவற்றினை ஒழித்தல் வேண்டுமென நாடினர். அவர், பல மனைவியரை மணப்பதால் ஏற்படும் தீமைகளையும், அதனல் பெண் இனத்திற்கு ஏற்படும் இன்னல்களையும், சமூகத்திற்கு உண்டாகும் இழுக்குகளையும் விளக்கிப் பல

கட்டுரைகள் எழுதினார்; பல இடங்களில் மக்களைப் பெருந் திரளாகக் கூட்டிவைத்து உபன்னியாசங்கள் புரிந்தார். ஓர் ஆண் இறக்கப் பல பெண்கள் கைம் பெண்களாவதை எடுத்துக் காட்டினார். இஃதன்றி குழந்தைகளுக்குத் திருமணம் செய்வதால் பலவிதத் தீமைகள் விளைவது ஒரு புறமிருக்க, விதவைகள் பெருகுவதற்கு அதுவே மூலகாரணமாயிருக்கிறது என்பதையும் அவர் நன்கு உணர்ந்தார். அரசாங்கத் தில் அதுபற்றிய தடைச் சட்டம் செய்யப் பேருதவி புரிந்தார்; 'தீண்டத்தகாதவர் என, மக்களில் ஓர் இனத்தவரை ஒதுக்குதல் இயற்கைக்கு மீறிய செயல்-நியாயவிரோதம்-அநீதி' என்று கருதினார்; 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்பதை உணர்ந் தார். மனித இனத்தில் உயர்வு தாழ்வு இல்லை எனத்துணிந்தார்; உடனே அத்தீமையையும் சமூ கத்தைவிட்டு ஒழிக்க உறுதி பூண்டார்; தீண்டத் தகாதவர் என்னப்படும் மக்களுக்குக் கல்வி அளித் தார்; தாம் அவர்களிடை வாழ்ந்து சுத்தமாயிருத் தல், கல்வி அறிவு பெறுதல் முதலியவற்றைப் போதித்தார்; நம் நாட்டு மக்களின் மனப்பான் மையை இச்சீர்திருத்தங்களின் வழியே திருப்பப் பெரு முயற்சி எடுத்து உழைத்தார்.

அவர் சுயமதிப்பைக் காப்பதில் வீரர். அவர், பிறர் சுய மரியாதைக்குப் பங்கம் விளையுமாறு நடந்தி திலர்; அங்ஙனம் பிறர் தம் சுயமதிப்புக்கு ஊறு

செய்யவும் இடங் கொடுத்திலர். அச்சுயமரியாதை வீரர் தம்மிடம் மரியாதைக் குறைவாய் நடந்த கல்வி இலாகாத் தலைவர் ஒருவருக்கு, அவர் தம்மி டம் வர நேர்ந்த போது அறிவு ஊட்டினார். கவர்னரே ஆயினும், அன்றி மற்றெவர் ஆயினும் தாம் உயர்ந்தோர் என்ற ஆணவங் கொண்டு வித்தியா சாகரரைப் பணிய வைக்க முயன்று வெற்றி அடைந்தனரில்லை. 'பதவி போயினும், உயர்ந்தோர் ஆதரவு நீங்கினும், அவர்கள் சீற் றம் கொள்ளினும் அஞ்சேன்' என்ற வீரம் அவர் மாட்டுப் பரிபூரணமாய் அமைந்திருந்தது. பெற்றோ ரையே அவர் இறையெனக் கொண்டிருந்தார்; அவர் கள் வார்த்தைக்கு மீறி நடக்கத் துணிந்திலர். பெரும் பதவி ஒன்று அவருக்குக் கிடைக்க இருந்த சமயத் தில், அவருடைய தந்தையார் அதை விரும்பாமை யால் வித்தியா சாகரர் அதை மறுத்துவிட்டார். வைதிகர்கள் தம் உயிருக்கே உலைவைக்கக் கூடும் என்னும்படி எதிர்ப்பு உச்சநிலை அடைந்திருந்த சம யத்திலும் அவருடைய அன்னையார் கட்டளையைச் சிரமேற்றாங்கி, கைம்பெண் மறுமணத்தை ஆதரித்த துண்டுப் பிரசுரங்களை ஏராளமாக வெளியிட்டு விநி யோகித்தார். ஈஸ்வர சந்திரர் கடனாற்றுவதில் பெரும் கர்ம வீரர். அவர் தம் கடமையை ஆற்ற என்றும் தவறியதில்லை. அவர், என்ன இடுக்கண் வந்துற்ற போதிலும், தம் கடமையைச் செய்தே

முடித்து வந்தார். இத்தகைய உன்னத குணக்குன்றின் வாழ்வு நமக்கு அறிவினை வளர்க்கும் ஞான ஊற்ருய் இருக்கிறது. தந்நல மற்ற தலைவராகிய பண்டித ஈஸ்வர சந்திர வித்தியா சாகரர் என்னும் சீர்திருத்த வீரரை ஈன்ற இந்தியத் தாயை இறைஞ்சுவோமாக. இந்திய இளைஞரே! வம்மின்.

The Liberty Press, G.T., Madras